www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—31 மார்ச் '88

3-[redacted]9

விலை: ரூ.1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

குர்த்வால்ட்ஹைம் இன்றைய ஆஸ்திரியாவின் ஜனாதிபதி. அவர் மீது ஒரு கிரிமினல் குற்றச் சாட்டு விசாரிக்கப்பட்டது. இரண்டாவது உலகப்போரின்போது இட்லரின் ஜெர்மனியில் படைத் தளபதியாக வேலை செய்தார் குர்த்வால்ட்ஹைம். கிரீஸிலிருந்தும், யுகோஸ்லாவியாவிலிருந்தும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை நாஜி சித்திரவதைக் கூடங்களுக்கு அனுப்பி வைத்தார்—இதுதான் குற்றச் சாட்டு.

மார்ச் 1986—ல் அமெரிக்காவில் உலக யூத மாநாடு நடந்தபோது முதன் முதலாகக் குற்றச் சாட்டு வைக்கப்பட்டது. ஆஸ்திரியாவில் தேர்தல் வரப்போகிற சமயம் அது. தேர்தலுக்கு நிற்கவிருந்த வால்ட்ஹைம் "கிடையவே கிடையாது" என்று மறுத்தார். "நடவடிக்கை எடுக்கும் அளவிற்கு அன்று எனக்கு அதிகாரம் கிடையாது. நான் வெறும் கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்த கீழ் நிலை அதிகாரி" என்று முதல் பொய்யை எடுத்து வீசினார். பதவி பிடிப்பதற்காக எச்சில் ஒழுக அவர் பொய் சொன்னார்.

இரண்டாம் உலகப் போர் நடந்த கருப்பு நாட்களில் இட்லரிடம் சிக்கி பட்ட துயரங்களை, பயங்கரங்களை அவ்வளவு லேசில் யூத குடும்பங்கள் மறந்து விடுமா? அவர் [illegible] மனிதாபிமானம் மிக்க சில வரலாற்றாசிரியர்கள் உலக அளவில் ஒரு விசாரணைக் குழு அமைத்து விசாரணைதொடங்கினார்கள்; அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள 24 ஆவணக் காப்பகங்களைத் துருவி ஆராய்ந்தார்கள்; வால்ட்ஹைம் உள்ளிட்டு 9 சாட்சிகளை விசாரித்தார்கள்; கடைசியில், அவரது புளுகு மூட்டைகளைக் கிழித்து எறிந்தார்கள். கடைசி அறிவிப்பு வரை உருட்டல் மிரட்டல்கள் தொடர்ந்து இருந்தன.

விசாரணைக் குழுவின் அறிக்கை நடந்தவற்றை வரிசையாக ஆய்கிறது; வால்ஹைம் நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு தகுதி படைத்த உயர்மட்ட ராணுவ அதிகாரியே; தான் எடுக்கின்ற நடவடிக்கை சட்டவிரோதமானது என்பது அவருக்குத் தெரிந்தே செய்திருக்கிறார்; அவரது சாட்சிப்படியேகூட ராணுவ வாழ்க்கை பற்றிய விவரங்கள் முன்னுக்குப் பின் முரணாகவே, நம்பத் தகாததாகவே உள்ளன.

வால்ட்ஹைமின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமளவிற்கு ஆதாரங்கள் திரட்டப்பட்டு விட்டன. ஆனால் இப்போதுகூட "அப்படி எதுவுமே நடக்கவில்லை" என்று முழுப்பூசணியை சோற்றில் மறைக்கிறார் வால்ட்ஹைம். குற்றத்தை மனம் திறந்து ஒப்புக் கொண்டு பதவி விலக வேண்டும் என்று ஆஸ்திரிய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதற்கும் சளைக்கவில்லை அந்தக் கொலை பாதகன். "நான் பதவி விலக முடியாது. அறிக்கையில் புதிதாக ஒற்றும் இல்லை, நான் தவறுகள் செய்திருப்பதற்கு ஒரு சாட்சியமும் நிரூபிக்கவும் இல்லை. நான் குற்றவாளி என்று எங்குமே சொல்லப்படவில்லை." "என் மனச்சாட்சி பரிசுத்தமாக இருக்கிறது" என்று சொல்லி திமிரோடு உலகை வலம் வருகிறார் வால்ட்ஹைம்.




முதலில் 86—ல் ஒரு பொய். அது இப்போது அம்பலமாகிவிட்ட பிறகு, பல தில்லு முல்லுகளை நடத்துகிறார்வால்ஹைம். அவரைக் காப்பாற்ற அரசு அதிகாரிகள் ஓடி வருகிறார்கள். விசாரணைக் குழுவின் தலைவர் ஹான் ருடால்ஃப் குர்ஸ் என்ற வரலாற்றாசிரியரிடம் அரசு அதிகாரி ஒருவர் போனார். "நடந்த குற்றங்களுக்கு வால்ட்ஹைம் தார்மீக ரீதியில் பொறுப்பேற்கவேண்டும்" என்று அறிக்கையில் உள்ள ஒரு தொடரை நீக்கவேண்டும் என்று கோரினார். குழுவைத் தாஜா செய்து அந்த வரியையே நீக்கிவிட்டது அரசு. இவை திரைக்குப்பின்னால் நடத்தப்பட்ட மிரட்டல்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

உள்ளே அறிக்கையை மிரட்டித் திருத்துகிறார்; வெளியே தான் குற்றவாளி அல்ல என்று பசப்புகிறார்; எப்படியாவது மிச்சமுள்ள 4 வருடங்களைத் தள்ளிவிடலாம் என்று கனவுகாண்கிறார். இப்படிப்பட்ட ஒரு கொலைகாரன் தான் ஐக்கிய நாடுகள் சபையின் பத்தாண்டு காலத் தலைவராக இருந்திருக்கிறார். ஏழை நாடுகளின் முதுகுகளில் ஈட்டிகள் குத்தப்பட்டது ஏன் என்றுஇவர் ஐ. நாவில் விசாரிக்காததன்காரணம்இதுதான். கொலைகாரர்களின் (ஏகாதிபத்தியம்) கையில் நியாயம் கிடைக்குமா?

இட்லரின் அமைச்சர் கோயபல்ஸ் பற்றிச் சொல்வார்கள்—"ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அதுவே உண்மையாகிவிடும்" என்று சொன்னானாம் கோயபல்ஸ். அதே இடத்தில் அதிகாரியாக வேலை செய்த வால்ட்ஹைமும் அசல் அச்சான சீடராக உருவாகியிருக்கிறார். இந்த அரக்கனின் வாழ்க்கை பற்றி அதிகாரபூர்வமான ஐ. நா. ஆவணம் சொல்கிறது. "கிழக்கு முனையில் போரில் அடிபட்டுத் திரும்பிய வால்ட்ஹைம் கவுரமான குடிமகனாகத் தனது சட்டப்படிப்புக்குத் திரும்பிவிட்டார்."

ஏகாதிபத்தியவாதிகள் வால்ட்ஹைம் போன்ற 'கவுரவமான குடிமக்களா'கப் பார்த்து தலைவராக்குகிறார்கள்; அவர்களின் கொலைச் செயல்கள் அம்பலத்துக்கு வந்துவிட்டாலும், மூடிமறைக்க முண்டிப் பார்க்கிறார்கள். ஏற்கனவே உலக முழுவதும்இக்கொலைகாரனுக்குஎதிராக எழுந்துவிட்ட ஆர்ப்பாட்டங்கள்—ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான கலகங்களாக வெடிக்க வேண்டும்; நிச்சயம் வெடிக்கும்!

● வேலாயுதம்

www.padippakam.com
படிப்பகம்

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

9

16—31 மார்ச் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் ரூ 6
ஆண்டு சந்தா ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை–600 015.

www.padippakam.com

பஞ்சாப்:

# பல்லுடைபடும் பாசிச கும்பல்

பஞ்சாப் பிரச்சினை மீண்டும் முன்னுக்கு வந்திருக்கிறது. இவ்வளவு காலமும் ஓய்ந்திருக்கிறது அல்லது கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டிருந்தது; இப்போது முன்னுக்கு வருகிறது என்கிற பொருளில் அல்ல. அரசு பயங்கரவாதம், சீக்கிய மதவெறி பயங்கரவாதம் ஆகிய இரண்டினாலும் இவ்வளவு காலமும் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த பஞ்சாப் அதிலேயே மூழ்கிப்போய் விடுமோ என்கிற நிலை உருவாகிவிட்டது. ''ஏதாவது'' செய்யவேண்டிய நிர்பந்தத்துக்கு பாசிச ராஜீவ் கும்பல் தள்ளப்பட்டுவிட்டது—என்பதால் பஞ்சாப் பிரச்சினை முன்னுக்கு வந்திருக்கிறது.

''சீக்கியப் பயங்கரவாதம் கட்டுக்கடங்காமல் எல்லை மீறிப்போய் விட்டது; பர்னாலா ஆட்சியினால் அதைக் கட்டுப்படுத்த இயலவில்லை'' என்று கூறி ரே—ரிபைரோ ஆட்சியை நிறுவி பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஓராண்டாகப் போகிறது.

அரசு மற்றும் சீக்கிய மதவெறி பயங்கரவாதப் படுகொலைகளுக்கு மத்தியில் பஞ்சாப் மக்கள் வாழப் பழகிக் கொண்டு விட்டார்கள். ஆனால் ரே—ரிபைரோ கட்டவிழ்த்து விட்ட அரசு பயங்கரவாதத்தினால் வாக்களித்தபடிக்கு சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாமற் போய்விட்டது. ஆயிரக்கணக்கான சீக்கிய இளைஞர்கள், வயோதிகர்களும்—பெண்களும்—சிறுவர்—சிறுமிகளும் கூட, கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடை சட்டம், தனிக் கோர்ட்டுகள் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஆகியன ஏவிவிடப்பட்டன. ''போலீசுடன் மோதல்', என்கிற பெயரில் பல சீக்கிய இளைஞர்களைப் பிடித்து சுட்டுக்கொன்றனர். மனித உரிமை மீறல்களும், பத்திரிக்கைத் தணிக்கைகளும் பஞ்சாபில் அறிவிக்கப் படாத ஒரு பாசிச ஆட்சியை நிறுவியது.

அப்படி இருந்தும் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ரே—ரிபைரோவின் அரசு பயங்கரவாதப் படையைத் தாக்கி அழிப்பது; ஆயுதங்களையும்—வங்கிகளையும் கொள்ளையிடுவது; கோர்ட்டுகள் முதலிய அரசு நிறுவனங்களை வெடிவைத்துத் தகர்ப்பது; தமது 'துரோகிகளை'க் கொல்வது—கூட்டாளிகளை விடுவிப்பது ஆகிய எதிர் நடவடிக்கைகளோடு மட்டும் சீக்கிய பயங்கரவாதிகள் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்களுடைய மதவெறி ஆணைகளுக்குக் கீழ்படியவும் கப்பம் கட்டவும் மறுக்கும் சீக்கிய மக்கள், குடும்பம் குடும்பமாக அழிக்கப்படுகின்றனர். இந்துக்களை பஞ்சாபிலிருந்து விரட்டவும், இந்து—சீக்கிய மதக் கலவரத்தைத் தூண்டவும் இந்துக்களுக்கு எதிரான மக்கள் திரள் படுகொலைகள் பலவும் செய்கின்றனர். பொற்கோவில் உட்பட எல்லா குருதுவாராக்களும் மீண்டும் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. ரே–ரிபைரோ தலைமையிலான ஆளுநர் ஆட்சி நிறுவி ஓராண்டாகிறது. அதை மேலும் நீட்டிப்பதற்கு சட்டபூர்வ வழி கண்டாக வேண்டியுள்ளது. அரசு பயங்கரவாதத்தை மேலும் கடுமையாக்கத் தீர்மானித்துள்ளது. இவ்விரு நோக்கங்களுக்காக பஞ்சாபில் மட்டும் ஆளுநராட்சியைக் கால வரையறையின்றி நீட்டிக்கவும், அவசரநிலை ஆட்சியைப் பிரகடனப்படுத்தவும் அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரத் தீர்மானித்துள்ளது.

அதே சமயம் பஞ்சாப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயலுவதாகக் காட்டிக் கொள்வதற்கு வேறு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முன்னாள் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் உட்பட சில அகாலிகளையும் பொற்கோவிலின் தலைமை குருமார்கள் உட்பட சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்துள்ளது. ஜைன முனிவர் சுசில் குமார் மூலம் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது. ''இந்தியாவின வடமேற்கே சீக்கியர்களின் பரிபூரண சுதந்திரத்தை அடைவதுதான் எங்கள் லட்சியம்'' என்று தலைமை குருமார்கள் அறிவித்துள்ளார்கள்.

அகாலிகளின் அரசியல் செல்வாக்கை வீழ்த்துவதற்காக பாசிச இந்திரா-ராஜீவ் கும்பல் உசுப்பிவிட்டதுதான் பிந்திரன்வாலே தலைமையிலான சீக்கிய மதவெறி பயங்கரவாதம். பிறகு அவர்களுக்கு எதிராகவே திரும்பியது. எனினும் பஞ்சாப் மக்களின் சில நியாயமான கோரிக்கைகளை அகாலிகளும் சீக்கிய பயங்கரவாதிகளும் முன் வைத்துள்ளனர். நதி நீர் பங்கீடு, சண்டிகர், மாநிலங்களுக்கு சுயாட்சி ஆகியவற்றைக்கூட இதுவரை பாசிச ராஜீவ் கும்பல் ஏற்றுக் கொள்ளவில்லை. அகாலிகளின் அனந்தப்பூர் சாகிப் தீர்மானம் உட்பட மாநில-மத்திய உறவுகளைப் பரிசீலிக்க நிறுவப்பட்ட சர்க்காரியா கமிஷன் அறிக்கையையும் கிடப்பில் போட்டுவிட்டது. 1984 டில்லி படுகொலைகளுக்குக் காரணமான காங்கிரஸ் கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிக்கவும், காவலில் உள்ள சீக்கியர்களை விடுவிக்கவும், கலகம் செய்த சீக்கிய ராணுவத்தினரை திரும்ப சேர்க்கவும் மறுக்கிறது.

பாசிச அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது, எதிர்த்தரப்பின் ஒரு பிரிவினருக்கு விலைபேசி சமரச உடன்பாடு காண்பது, சில சலுகைகளை அறிவித்து மக்களை ஏய்ப்பது—இந்த வழக்கமான உத்தியையே தமது அரசியல் தந்திரமாகக் கொண்டு பல்லுடைபடுகிறது பாசிச ராஜீவ் கும்பல். இப்போது மீண்டும் பஞ்சாபில் அதே முயற்சியில் இறங்கியிருக்கிறது! மீண்டும் தலைகுப்புற விழும்! ●

படிப்பகம்

www.padippakam.com

சாக்கடைகள்-
நெரிசல்-
குப்பைகள்

# சீரழிவின் விளிம்பில் நகரங்கள்



பி.சி. அலெக்சாண்டர் தமிழகத்தின் புதிய ஆளுநர். வால்டர் ஐசக் தேவாரம்—சென்னை நகரப் போலீஸ் ஆணையாளர். சாந்தா ஷீலா நாயர்—சென்னை மாநகராட்சி ஆணையாளர்—அதிகார வர்க்கத்தின் மூன்று கைதேர்ந்த "ஸ்டண்ட் மாஸ்டர்கள்". அதாவது எஜமான விசுவாசத்துக்காகவும் சுயவிளம்பரத்துக்காகவும் பரபரப்பூட்டும் ஆரப்பாட்ட உத்திகளில் வல்லவர்கள். இந்த மூன்று புள்ளிகளும் தமிழக ஆளுநரின் "அவசர நிலை ஆட்சி" என்கிற ஒரு கோட்டில் இப்போது இணைந்துள்ளன.

நேர்மை, கண்டிப்பு, துடிப்பு நிறைந்த தமது நிர்வாகத் திறமையினால் சென்னை நகரையே சொர்க்கபூமியின் தலைநகராக்கி விடப் போவதாக சொல்லிக் கொண்டு இந்த மூன்று "ஸ்டண்ட் மாஸ்டர்களும்" கிளம்பியிருக்கிறார்கள். அலெக்சாண்டர்—தேவாரத்தின் அங்கிகளையும், சாந்தா ஷீலா நாயரின் முந்தானையையும் ஏந்திக் கொண்டு முதலாளித்துவப் பத்திரிக்கைகள் கூடவே அலைகின்றன.

ஆளுநராகப் பதவியேற்ற சில நாட்களில் திடீரென்று மாநகராட்சி அமைந்துள்ள "ரிப்பன்" கட்டிடத்திற்கு வந்த அலெக்சாண்டர் "அடுத்த ஒரு மாதத்தில் கண்ணுக்குத் தெரியுமளவு நகரை சீரமைத்து விட வேண்டும்" என்று உத்திரவு போட்டாராம். அவ்வளவுதான், துள்ளி எழுந்தார் சாந்தா ஷீலா நாயர். மாநகராட்சி ஊழியர்களையும் அலுவலர்களையும் விரட்டினர். துணைக்குத் தேவாரத்தின் படையையும் சேர்த்துக் கொண்டார்.

பாதாள சாக்கடைகளும், பொதுக் கழிப்பிடங்களும் சுத்தம் செய்யப்படுகின்றன. தெருவிளக்குகள் பழுது பார்க்கப்படுகின்றன. கொசு மருந்து பெருமளவு அடிக்கப்படுகிறது. பாலங்கள், சுரங்கப் பாதைகள், அரசு சுவர்கள் வெள்ளையடிக்கப்படுகின்றன. நடைபாதைக் கடைகள், ஆக்கிரமிப்புக் கடைகள் அகற்றப்படுகின்றன. படிக்கட்டுகளில் பயணம் செய்வோர் இழுத்துப் போய் தண்டிக்கப்படுகிறார்கள். லாரிகளில் குடிதண்ணீர் வழங்கத் துவங்கிவிட்டனர்.

பத்திரிகை நிருபர் படையைக் கூடவே கூட்டிப் போய் நகர சீரமைப்புப் பணிகள் மும்முரமாக நடப்பதாகக்காட்டியுள்ளார் சாந்தா ஷீலா நாயர். அவர்களும் பத்தி பத்தியாக எழுதுகிறார்கள். எம். எல்.ஏ.கள், எம்.பிக்கள், அரசியல் பிரமுகர்கள், மந்திரிகள், குறிப்பாக திராவிடக் கட்சிகளின் அரசியல் குறுக்கீடுகள்தான் அதிகாரிகளின் கைகளைக் கட்டிப் போட்டிருந்தன எனவேதான் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், அரசியல்தலையீடுகள் மலிந்து போய் நிர்வாகம் சீர்குலைந்து கிடந்தது; ஆளுநர் ஆட்சியில் அதாவது டில்லியின் தேசிய ஆட்சியில் அதிகாரிகள் சுதந்திரமாகவும், கறாராகவும் இயங்குகிறார்கள்; நிர்வாகம் சீரடைந்துவருகிறது. நரகமாக இருந்த சென்னை நகரம் விரைவில் சொர்க்கமாக மாறும்—இப்படிப்பட்ட நம்பிக்கையை நகர மக்களிடையே உருவாக்கும் வேலைகளில் அலெக்சாண்டர், சாந்தா ஷீலா நாயர், தேவாரம் ஆகிய 'ஸ்டண்ட் மாஸ்டர்கள்' இறங்கியுள்ளனர்.

பி. சி. அலெக்சாண்டர்—இந்திரா—ராஜீவ் ஆகிய பிரதமர்களின் பிரதானச் செயலாளராக இருந்த போது அவருக்கு நேர் கீழேவேலை செய்த அதிகாரி வெளிநாட்டுக்கு உளவு 'பார்த்தார். "அப்பாவி" அலெக்சாண்டருக்கு அதில் சம்பந்தமில்லை என்றுசொல்லிக் கொண்டாலும், உளவுநடப்பதைக்கண்டுபிடிக்கவும் கையாலாகாதவர். சாந்தா ஷீலா நாயர்—எம்ஜிஆரின் 'ஆசி பெற்ற' அதிகாரி. தேவாரம் —கடற்கரையை அழகுபடுத்துவதற்காக மீனவர்களைப்பலாத்காரமாகவெளியேற்ற முயன்று, அவர்கள்எதிர்த்த போது படுகொலை செய்த பாசிச ரௌடிப் படைத் தலைவர். இந்தக் கும்பலைப் பொருத்தவரை நகரை சீரமைப்பது என்றாலே சிறுவியாபாரிகளையும், நடைபாதை குடியிருப்போர்களையும், குடிசைவாழ் மக்களையும் தாக்குவதுதான். அவர்களுடைய தொழிலையும், வாழ்விடங்களையும் பறிப்பது; எதிர்த்து போராடினால் அவர்கள் வாழ்வையே-உயிரையே பறிப்பது; நகர்ப்புற ஏழை மக்களால்தான் அதன் அழகே கெடுகிறது; அவர்களை விரட்டுவோம். அவசியமானால்—எதிர்த்தால் அவர்களையே ஒழித்து கட்டி விடுவோம்—இதுதான் இந்திரா—சஞ்சய்—ராஜீவ் கும்பலின் பரம்பரை அடிவருடிகளான இந்தக் கும்பலின் கொள்கை!

நகர்ப்புற பங்களா வாசிகள் இந்தக் கும்பலின் "கெடுபிடிகள், சீரமைப்பு பணி"களை ஆகா, ஓகோவெனப் பாராட்டுகின்றனர். ஆனால் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு இவர்களுடைய பரபரப்பூட்டும் ஆர்ப்பாட்ட உத்திகள்—ஸ்டண்டுகள் பற்றித் தெரிந்தே இருக்கின்றன. சென்ற வாரம் வட சென்னைப் பகுதியில் மாநகராட்சிப் படையின் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட ஆணையாளர் சாந்தா ஷீலா நாயர் போனவுடன் அங்கு குடியிருப்போர் சூழ்ந்து கொண்டனர். "இதுவொன்றும் வழக்கமாக நடப்பதில்லை. இத்தனை நாளும் புறக்கணித்தே கிடந்தோம். ஏதோ இன்றைக்கு வந்திருக்கிறார்கள்; இன்னும் எத்தனை நாளைக்கோ? வெறும் கண் துடைப்புதான்!" என்று ஆத்திரத்தோடு பொரிந்து தள்ளினார்கள். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அதிகாரிக்கே உரிய தோரணையில், "ஆவண செய்கிறோம்; ஆதரவு தாருங்கள்" என்று சொல்லி நழுவிக் கொண்டார்.

1976ம் ஆண்டு அதிகாரவர்க்கக் கெடுபிடிகளைக் காட்டி அவசர நிலை ஆட்சிக்கு ஆதரவு மனோபாவத்தை மத்தியதர வர்க்கத்திடையே உருவாக்கினார்கள். அதைப் போல மீண்டும் சிலவேலைகள் செய்து ஆளுனர் ஆட்சிக்கு ஆதரவான பொதுக் கருத்தை உருவாக்க முயலுகிறார்கள். அது அவர்களது எஜமானர்களான பாசிச ராஜீவ் கும்பல் ஓட்டுப் பொறுக்குவதற்குச் சாதகமாக அமையும் என்று நம்புகிறார்கள்.

ஆனால் 'சிங்கார' சென்னை சீரழிந்து போனதற்குப் பல காரணங்கள் உள்ளன. லஞ்சஊழல், அதிகார முறைகேடுகள், அரசியல் குறுக்கீடுகள் அவற்றுள் சிலதாம்! இரண்டாவதாக, ஏதோ திராவிடக்



படிப்பகம்

கட்சிகள் மட்டும்தான் லஞ்சஊழல், அதிகார முறைகேடுகள், அரசியல் குறுக்கீடுகள் செய்கின்றன, மற்ற பிற கட்சிகள் அப்படியில்லை என்பதும் தவறு. அதிகார வர்க்கத்தை சுதந்திரமாகச் செயல்பட விடுவதும், நடைபாதை வாசிகள், குடிசைவாழ் மக்கள், சிறு வியாபாரிகளை ஒழித்துக் கட்டினால் நகரங்கள் சீர்பட்டுவிடும் என்பதும் தவறு. அலெக்சாண்டர், சாந்தா ஷீலா நாயர், தேவாரம் கும்பல் செய்வது போன்ற சில கண்துடைப்பு—மக்கள் விரோதக் கெடுபிடிகளால் நகரை சீரமைத்துவிட முடியாது.

கல்கத்தா, பம்பாய், டெல்லி, சென்னை, பங்களூர், அகமதாபாத் ஆகிய வரிசையில் இந்தியாவில் பெரு நகரங்கள் உள்ளன. இவற்றில் நிர்வாகத் திறமைக்கும், நேர்மைக்கும் 'பெயர் போன' போலிக் கம்யூனிஸ்டு ஜோதிபாசுவும், ஜனதாவின் ஹெக்டேயும் ஆளும் நகரங்கள் கல்கத்தாவும் பெங்களூரும். அலெக்சாண்டரின் எஜமானர் பரிசுத்தம் ராஜீவின் கட்சி ஆளும் பெருநகர்கள் டெல்லியும் அகமதாபாத்தும். சிவசேனா—காங்கிரசு ஆளும் நகரம் பம்பாய். சென்னையைப் போலவே, அதையும் விஞ்சிவிட்ட அளவு மற்ற பிற பெருநகர்கள் எல்லா வகையிலும் சீரழிந்து வருகின்றன.

நகர்ப்புற சேவைத் துறைகள் அனைத்துமே நிலைகுலைந்து போய்விட்டன. நடைபாதைக் கடைகள், நடைபாதை வீதிகள், குடிசைகள், குப்பங்கள் சேரிகள் மட்டுமல்ல, பேருந்துகள் நெரிசலில் பிதுங்கி வழிகின்றன. சாலைப் போக்குவரத்துகள் தாறுமாறாகி ஸ்தம்பித்துப் போய்விடுகின்றன. குடிநீருக்கான வரிசைகள் நீண்டு கொண்டே போகின்றன. அடைத்துக்கொண்ட சாக்கடைகளிலிருந்து கழிவுநீர் வெளியேறித் தெருக்களை நிரப்புகின்றன. அகற்றப்படாத குப்பைகள் மலைகளாக உயருகின்றன. இவை அனைத்தும் இந்திய நகரங்களின் அவலங்கள். பீதியூட்டும் எதிர்காலத்தைக் குறிக்கும் எச்சரிக்கைகள். ஒருபுறம் மிகச் சிலரது மிதமிஞ்சிய பகட்டான ஆடம்பர வாழ்வும் செல்வமும்; மறுபுறம் வறுமையின் அவலங்கள் ஆத்திரங்கள். இவற்றின் விளைவாக மிகச் சிறிய காரணம்—தூண்டுதல் இருந்தாலே போதும்—நகரக் கலவரங்கள் வெடிக்கின்றன; கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், விபச்சாரம் ஆகிய கிரிமினல் குற்றங்கள் அதிகரிக்கின்றன; இளைஞர்கள் ஆபாச வக்கிரச் சீரழிவுக்கும் போதைப் பொருள்களுக்கும் பலியாகின்றனர்.

## குவியும் மக்களும் குடியிருப்புப் பிரச்சினையும்


இருண்ட வாழ்வும் தரிசான நிலங்களும் நிறைந்த கிராமங்களை விட்டு பளபளக்கும் நகர்ப்புறவாழ்க்கையை நோக்கி ஆண்டு தோறும் 60 லட்சம் மக்கள் ஓடுகிறார்கள். இதன் விளைவாக 1951ல் 560 லட்சமாக இருந்த நகர்ப்புற மக்கள் தொகை 1987ல் 2300 லட்சமாக அதாவது நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது. நாட்டின் மக்கள் தொகையில் கால் பகுதியாக நகர்புற மக்கள் தொகை பெருகிவிட்டது. கல்கத்தாவிலும் பம்பாயிலும் டில்லியிலும் மட்டும் தலா ஒரு கோடிக்கு மேல் மக்கள் குவிந்துள்ளனர். 10 லட்சம் பேருக்கு மேல் குவிந்துள்ள பெரு நகரங்கள் 20க்கு மேலே போய்விட்டன.

நகரங்களில் குவியும் கிராமப்புற ஏழைகள் மனிதர்கள் வாழ்விற்குக் கொஞ்சமும் அருகதையற்ற சேரிகள், குப்பங்கள், குடிசை, நடை பாதைகளில் தஞ்சமடைகிறார்கள். நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் கழித்துக் கட்டப்பட்ட தகரங்கள், பலகைகள் படுதாக்களைக் கூரையாகவும், கோணிப் பைகளைக் கதவுகளாகவும், நடைபாதைகளையே கழிப்பிடங்களாகவும் கொண்டு வாழ்கிறார்கள். நகர மக்கள் தொகையில் மற்றொரு பாதி ஒரு அறை வீடு கொண்ட பல மாடிக் கட்டிடங்களில் அடைபட்டுக் கிடக்கின்றனர். அவையும் எப்போது வேண்டுமானாலும் நொறுங்கி விழுந்து விடும் நிலையிலே உள்ளன.

மத்திய அரசின் புள்ளி விவரப்படி நாட்டின் பல்வேறு நகரங்களிலும் 300 லட்சம் மக்கள் நடைபாதை வாசிகளாகவோ, புறம்போக்கு குடிசைப் பகுதி மக்களாகவோ வதைபடுகின்றனர். திடீர் திடீரென்று முளைக்கும் நகர்ப்புற சேரிகள் பங்களா வாசிகளின் கண்களை உறுத்துகின்றன. ஏனெனில் நகர்ப்புற சீர்குலைவின், ஏழ்மையின் சின்னமாக அவை விளங்குகின்றன. தலைநகர் புதுடில்லியின் ஆகாசப் பாலங்கள், பசுமை நிறைந்த விசாலமான பூங்காக்களுக்கு ஓரங்களில் வறுமை தாண்டவமாடும் அவலங்களை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

நந்து நகரி, சீமாபுரி போன்ற கிழக்கு டில்லியின் குடிசைப் பகுதிகளில் மனிதர்களும், நாய்கள் பன்றிகள் ஆகிய பிராணிகளும் ஒன்றாகவே வாழ்கிறார்கள். அடைபட்டுத் திறந்து கிடக்கும் தெருச் சாக்கடைகளில் மலங்கள் மிதக்கின்றன. மலையாகக் குவிந்து கிடக்கும் குப்பை மேட்டில் பெருச்சாளிகளும் காகிதம் பொறுக்குபவர்களும் திரிகின்றனர்; சகதியில் பன்றிகள் மூழ்கித் திளைக்கின்றன. சாக்கடைக்கு நடுவே குடிநீருக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கிடக்கின்றனர். இரவு நேரங்களில் தார்ப்பாய்களைக் கூரையாகவும், செய்தித் தாள்களைப் போர்வையாகவும் கொண்டு கடுங்குளிரில் மக்கள் முடங்கிக் கிடக்கின்றனர்.

நாட்டின் நான்கு பெரும் நகரங்களில் மட்டுமல்ல பூங்கா நகரமாயிருந்த பெங்களூர், பசுமை நகரமாயிருந்த அகமதாபாத் மற்றும் பிற நகரங்களிலும் கூட சேரிகளும் ஏழ்மையும் அவலங்களும் பெருத்துப் போய் விட்டன. உயர்ந்து வரும் வீட்டு வாடகையைச் சமாளிக்க முடியாமல் 'மதிப்புமிகு' மத்தியதர வர்க்கத்தினரே குடிசைப் பகுதிகளில் வாழ வந்து விட்டார்கள். இப்படி குடிசைப் பகுதிகளில் தஞ்சமடையத் தயங்குபவர்கள் தொலை தூரங்களில் உள்ள புற நகரங்களுக்குப் போய் விடுகிறார்கள். எனவே போக்குவரத்துக்கு வாய்ப்புள்ள கிராமங்களிலும் வீட்டுமனை விலையேறி "ரியல்எஸ்டேட்" கொள்ளை



அதிகரிக்கும் குடிசைப் பகுதிகள்

குடிசைப் பகுதி மக்கள்தொகை (லட்சக்கணக்கில்)

1981 அடிப்படை சதவிகிதத்தில்:

www.padippakam.com

www.padippakam.com

பெருகிவிட்டது. புதிய புறநகர் பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மக்கள் அவதிப்படுகின்றனர்.

நகர்ப்புற சிதைவும் அவலமும் நிறைந்த புற்று நோய் பெரு நகரங்களிலிருந்து நாடு முழுவதும் உள்ள 3245 நகரங்களையும் தொற்றிக் கொண்டுவிட்டது. நகர்ப்புறக் கவர்ச்சி மட்டுமல்ல கிராமப்புற பஞ்சம், பசி பட்டினியிலிருந்துமீள்வதற்காக மக்கள் வந்து குவிகிறார்கள். கிராமங்களில் பட்டினியால் கிடந்து சாவதைவிட நகரங்களில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவாவது முடியும் என்றுஅவர்கள் நம்புகிறார்கள். கிராமப்புற, சிறு நகர்புற வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வக்கற்ற ஆட்சியாளர்கள் நகரங்களில் குவியும் மக்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். நகர்ப்புறத் திட்டமிடுதல் என்பதே கிடையாது; தற்காலிக நிவாரணங்கள் மட்டுமே நடக்கின்றன.

நகர்ப்புற சேரிகள், குப்பங்கள், குடிசைப் பகுதிகள் பெருகுவதுஉள்ளூர் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பல வகைகளில் வசதியாக இருக்கிறது. குடிசைப் பகுதிப் பிரபுகள் என்றழைக்கப்படும் பேட்டை ரௌடிக் கூட்டத் தலைவர்களோடு சேர்ந்துகொண்டு வாடகை வசூல்உட்பட பல சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

## அடிப்படைத் தேவைகளுக்கு அவதி

நகரின் மையங்கள் அரசு—தனியார் அலுவலகங்கள், வியாபாரங்கள், வசதி படைத்தோர்வாழிடங்களாகப் போய்விட்டன; சேரிகள், குடிசைகள், நடைபாதைகளுக்குப் பாதிப் பேர் தள்ளப்பட்டுவிட்டனர். நகரங்கள் எல்லாத் திசைகளிலும் விரிவடைந்துகொண்டே போகின்றன. புறநகர்ப் பகுதிகளுக்கு விரட்டப்பட்ட மக்கள் தினந்தோறும் நகர மையங்களுக்கு இழுத்தடிக்கப்படுகிறார்கள். நகர போக்குவரத்துகள் நிலைகுலைந்து போயுள்ளன.

ஐந்தாண்டுகளில் டில்லிபோக்குவரத்துக் கழகத்தின் பஸ்கள் இரண்டு மடங்காகியுள்ளன; தினசரி 50 லட்சம் பயணிகளை அவை சுமந்து செல்லுகின்றன. இருந்தாலும் நெரிசலைச் சமாளிக்க முடியவில்லை. சில வழித் தடங்களில் நிமிடத்திற்கு 11 பஸ்கள் ஓடுகின்றன. இந்த வேகத்தில் போனால் எல்லாம் செயலிழந்து விழுந்து விடும். அங்கு ஓடும் பஸ்களில் கால் பகுதி பஸ்கள் காயலாங்கடைக்குப் போக வேண்டிய அளவு ஓட்டை உடைசலானது; ஆனாலும் ஓடிக் கொண்டிருக்கின்றன. பெங்களூரில் பஸ்களுக்குக் காத்துக் கிடந்தே காலம் கழிந்துவிடும். நிர்வாகத்துக்குப் பெயர் போன அகமதாபாத் போக்குவரத்து சேவையில் பாதி பஸ்களுக்கு மேல் வெறும் தகர டப்பாக்கள்தாம்; பல பஸ்கள் பாதி வழியிலேயே படுத்துக் கொள்வது வழக்கம்.

அரசு—தனியார் அலுவலகங்களும் வியாபார வர்த்த நிறுவனங்களும் நகர மையங்களில் குவிந்து கிடப்பதினால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் எழுதி மாளாது. கல்கத்தாவின் 2 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்குள் எல்லா முக்கிய அரசு அலுவலகங்களும் 500 வர்த்தக நிறுவனங்களும் குவிந்துள்ளன. அந்தப் பகுதிக்குள் தினந்தோறும் 32 லட்சம் மக்களும் அதே அளவு வாகனங்களும் வந்து போகின்றன. கைவண்டிகள், கைரிக்ஷாக்கள், சைக்கிள்கள், மக்கள் நிரம்பி வழியும் பஸ்கள்—டிராம்கள் மற்றும் லாரிகளால் சாலைகள் அடைபட்டு மணிக்கு சராசரி 8 கிலோ மீட்டர் வேகமே வாகனங்கள் செல்ல முடியும். கல்கத்தா நகரின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு விஞ்ஞான பூர்வமான தீர்வு காண்பதற்கு இதுவரை முயன்றதே கிடையாது; முடியவும் முடியாது என்று அதிகாரிகள் கையை விரித்து விட்டார்கள்.


சாலை நெரிசல்களோடு தொழிற்சாலைகள் உமிழும் புகையும் சேர்ந்து காற்று வெளியை முற்றாக மாசுபடுத்தி மூச்சுத் திணற வைத்து விடுகிறது. கல்கத்தா நகரின் டல்ஹௌசி, காலிகட்டம், பவானிபூர் ஆகிய பகுதிகளில் மனிதர்கள் சகித்துக்கொள்ளும்அளவைவிட மூன்று மடங்கு அதிகமாக காற்று மாசுப்பட்டுள்ளது. டில்லி நகரில் வழக்கமாக சில மணி நேரம் மூடுபனிதான் வெயில் வருவதை மறைப்பதுண்டு. இப்போது புழுதியும் மாசும் பலமணிநேரம்வெயிலை மறைக்கிறது. உயர்நீதி மன்றக் கமிட்டி ஒன்றின்படி மனிதர்கள் தாங்கிக் கொள்ளும் அளவைவிட மிக அதிகமான சப்தம் காதுகளைத் தாக்குகின்றது.

போக்குவரத்து மட்டுமல்ல குடிநீர், சாக்கடை, மின்விளக்கு வசதியின்றி நகர மக்கள் அவதிப்படுவதும் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. பெரும்பான்மையான நகரங்களில் கால்வாசி மக்கள் குடிதண்ணீரும் சாக்கடை வசதியும் இன்றி தவிக்கிறார்கள். மூன்றில்ஒரு பகுதியினர் கழிப்பிட வசதியின்றித்தவிக்ன்கிறனர்.

வழக்கமாக கோடை காலங்களில்தான் குடிநீர் பிரச்சினை வரும். இப்போது அது நிரந்தரமாகிவிட்டது. சென்னைக் குடிநீர் பிரச்சினை தீராததாகிவிட்டது; அதேபோல அகமதாபாத்தில் குடிநீர் வியாபாரம் முக்கியமான தொழிலாகி விட்டது. மற்ற நகரங்களின் நிலைமையும் சகித்துக் கொள்ளக் கூடியதாக இல்லை. பெங்களூரில் 2 மணிநேரம்தான் குழாய்த்தண்ணீர் விடப்படுகிறது. லக்னோ நகரின் பல பகுதிகளின் குழாய்களில் குடிநீர் வெறுமனே பல மணிநேரம் சொட்டுவதோடு சரி. பாட்னாவில் இன்னும் மோசமான நிலைமை. பாதிப்பேருக்கு மேல் குழாய்க் குடிநீர் வசதி கிடையாது; சுமந்துதான் வரவேண்டும். கிடைக்கும் இடங்களிலும் சாக்கடை நீர் கலந்து வருகிறது. வழங்கப்படும் குடிநீரில் 40 சதவிகிதம் மாசுபட்டது என்று சட்டமன்றத்தில் அரசே ஒப்புக் கொண்டுள்ளது.


இதைவிடப் படு மோசமானது என்னவென்றால் பல நகரங்களில் சாக்கடையில் ஓடும் நச்சு நீர் சுத்திகரிக்கப்படுவதே இல்லை. அவை விஷக் காற்றைப் பரப்பிக் கொண்டே ஓடுகின்றன; உமிழ்கின்றன. கல்கத்தா நகரின் பந்தாலாவிலுள்ள பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் பல ஆண்டுகளாக செயல்படவே இல்லை. வங்கக்கடலில் கலக்கும் குல்தி கங்கை எனப்படும் கடல்நீர் கால்வாயில் சாக்கடையைக் கொட்டிவிடுகிறார்கள். அகமதாபாத்தின் மூன்றில் இரண்டு பங்கு சாக்கடை சபர்மதி ஆற்றில் கொட்டப்படுகிறது. டெல்லியிலேயே பாதி சாக்கடைதான்

அடிப்படை வசதியில்லை. மின்வசதி இல்லாத வீடுகள்; மொத்த மக்கள் தொகையில் குடிநீரும், கழிப்பிடமும் இல்லாதவர் சதவிகிதம்




படிப்பகம்

www.padippakam.com




சுத்திகரிக்கப்படுகிறது. மீதி யமுனை நதியில் கொட்டப்படுகிறது.

''இந்தியாவின் குப்பைநகரம்'' என்று அவப்பெயர் பெற்றது பாட்னா என்று வெட்கமின்றி ஒப்புக் கொள்கிறார் ஒரு ஆளும் கட்சி எம். பி. ஒரு நாளைக்கு ஒரு கால் பந்தாட்ட மைதானத்தை நிரப்பக் கூடிய குப்பை அந்த நகரில் குவிகிறது. இந்தக் குப்பையை அகற்றுவதற்காக 5000 துப்புரவுத் தொழிலாளர்களும் 58 டிராக்டர்களும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். ஆனால் சோதித்தறிந்தபோதுதெரிந்தது; 15 டிராக்டர்களே ஓடும் நிலையில் உள்ளன. ஐந்தில் ஒரு பகுதி தொழிலாளர்கள் பட்டியலில் மட்டும்தான் உள்ளார்கள். கள்ள சம்பளப்பட்டியல் தயாரித்துக் கொள்ளையடிக்கப்படுகிறது. மாசுபட்ட குடிநீர், குவியும் குப்பை ஆகியவை காரணமாக பாட்னா நகரில் மூன்று பேருக்கு ஒருவர் வீதம் ''டெல்லி தொப்பை'' என்னும் நோய் பிடித்திருக்கிறது.

## தும்பைவிட்டு வாலைப் பிடிக்கும் முயற்சி

கல்கத்தா, பம்பாய், டெல்லி உட்பட நாட்டின் நகரங்கள் எல்லாம் நிலைகுலைந்து கிடக்கும் போது சென்னையை மட்டும் சீர்படுத்திவிடப் போவதாக அலெக்சாண்டர்—சாந்தா ஷீலா நாயர்—தேவாரம் ஆகிய ''ஸ்டண்ட் மாஸ்டர்கள்'' குதிக்கிறார்கள். அந்த நகரங்களைக் சீர மைப்பதற்கு கோடி கோடியாக நிதி ஒதிக்கி பல திட்டங்களைப் போட்டும்கூட தோற்றுப் போனார்கள். வெறுமனே அதிகார வர்க்கக் கெடுபிடி மற்றும் கண் துடைப்பு வேலைகளால் இந்தக் கும்பல் சென்னையைச் சீரமைக்கப்போகிறதாம்!

உதாரணமாக கல்கத்தாவின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க சுரங்கரெயில் திட்டம்வந்தது. ஆனாலும் பிரச்சினை தீரவில்லை. சென்னைக்கு துரிதரயில் திட்டம் போட்டு அற்பநிதி ஒதுக்கி ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்லுகிறது. இந்த லட்சணத்தில் சைக்கிள் மற்றும் ரிக்ஷாக்காரர்களை விரட்டுவதால், படிக்கட்டுப் பயணிகள் மீது தேவாரம் படையைஏவி விடுவதால் போக்குவரத்தை சரி செய்துவிட முடியுமா?

மேலும் சீரமைப்புத் திட்டங்கள் எதையும் போடமுடியாத அளவு மாநகராட்சிகள் அனைத்தும் திவாலாகிப் போயுள்ளன. பம்பாய் மாநகராட்சிக்கு 324 கோடி ரூபாய் கடன் உள்ளது. டில்லி நகரச் சேவைகளுக்காக வரிக்கு மேல் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அரசு வாரியிறைக்கிறது. கிராமப்புறமக்களை ஒட்ட உறிஞ்சி இம்மாதிரி நகரசேவைகளுக்குக் கொட்டுகிறார்கள். ஆனாலும் பிரச்சினை தீரப்போவதில்லை என்று நகர்ப்புற வடிவமைப்பு வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

ஒரு கிலோ மீட்டருக்கு 50 கோடி ரூபாய் விழுங்கும் கல்கத்தா சுரங்க ரெயில்பாதைத் திட்டம்; 520 கோடி ரூபாய் செலவாகும் டெல்லி கிழக்கு—மேற்கு ரெயில் பாதைத் திட்டம்; 240 கோடி ரூபாய் செலவில் பெங்களூர் குடிநீர்த்திட்டம் ஆகிய அனைத்தும் வளரும் நகரத்தேவைகளுக்கு சொற்ப அளவேஈடுசெய்ய முடியும். இவையும், தேசியவீடமைப்பு வங்கி நிறுவுவது; சாக்கடை நீரை சுத்திகரித்து புறநகரப் பண்ணைகளில் பயன்படுத்துவது, குப்பைகளை எரிசக்தியாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வது ஆகிய திட்டங்களும் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் முயற்சியாகவே இருக்கும்.

நகர்ப்புற சீரமைப்புக்கான இந்தத் திட்டங்கள் அனைத்தும் தோல்வியுறுவதற்கான முக்கியமான காரணம், அவை நகர்ப்புற சீர்குலைவுக்கான அடிப்படைகளைக் கண்டு களையும் முயற்சியாக இல்லை.

● கிராமப்புறங்களில் வறட்சியும், வெள்ளமும், நிலப்பிரபுத்துவ சுரண்டல் ஒடுக்குமுறையும் பஞ்சம், பசி, பட்டினி ஆகியனவும் நீடிக்கும் வரை கூலி ஏழை விவசாயிகள் நகரப்புறங்களில் தஞ்சம் புகுவது தவிர்க்க முடியாது.

● நகர மையங்களில் அரசு—தனியார் அலுவலகங்களும் வியாபார—வர்த்தக நிறுவனங்களும் குவிக்கப்பட்டுள்ளன. நகரின் பெரும் பரப்பளவு அதிகாரிகளும், முதலாளிகளும், வியாபாரிகளும், அரசியல்வாதிகளும் ஆகிய வேண்டாத ஒட்டுண்ணிகளது ஆக்கிரமிப்பு-ஆடம்பர வாழ்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

● நகர மக்களின் வாழ்வுக்குரிய தொழிற்சாலைகளும், அவர்களின் வாழ்விடங்களும் திட்டமிட்ட முறையில் வடிவமைக்கப் படாமல் அராஜகமான வளர்ச்சிக்கு விடப்பட்டுள்ளன. கேடுகளையும் கழிவுகளையும் திட்டமிட்டு அகற்றக்கூடிய வசதியுடைய தொழிற்சாலைகளையும், அவற்றோடு இணைந்த தொழிலாளர் குடியிருப்புகளையும் தேவையை ஒட்டிய பகுதிகளில் அமைப்பதன் மூலம் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

● எல்லோருக்கும் வேலை அடிப்படையிலான குடியிருப்புகள் அமைப்பது, தனியார் தரகு—வியாபார, வர்த்தக அராஜகங்களை ஒழித்து திட்டமிட்ட விநியோக முறைகளை உருவாக்குவது, வேண்டாத சதைப் பிண்டமான அரசு, தனியார் அலுவலகங்களை — அதிகார வர்க்கக் கூட்டத்தை ஒழிப்பது ஆகிய நடவடிக்கைகளினால் நகர்ப்புற சீர்குலைவுகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

இவை எல்லாம் இன்றைய அரசு அமைப்பின் கீழ்மேற்கொள்ள முடியாது. உழைக்கும் மக்களிடம் அதிகாரம் உள்ள புதிய ஜனநாயகத்தின் கீழ்தான் சாத்தியம். ஏனெனில் அதுதான் மக்கள் நலனை மையமாகக் கொண்டு திட்டமிட்டு செயல்படுத்தும். அவ்வாறில்லாமல் இன்றைய போலி ஜனநாயகத்தின் கீழ் அதிகாரவர்க்க கெடுபிடிகள், கண்துடைப்புகள் மூலம் பாசிச அடக்கு முறைகளை நியாயப்படுத்த முடியும் அல்லது ஏதாவது ஒரு ஒட்டுப் பொறுக்கிக் கும்பலுக்கு உதவிடமுடியும். மற்றபடி நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாவதைத் தடுத்துவிடமுடியாது!

● ஆர். கே.



படிப்பகம்

www.padippakam.com



# உயிர்க்கொல்லி வியாபாரம்



'இரண்டு பெற்றால் இன்ப மயம்!', 'ஒன்று பெற்றால் ஒளி மயம்!' என்ற சிவப்பு முக்கோண சின்னத்துடன் கூடிய விளம்பரங்கள் அதை மருத்துவமனையை அலங்கரித்துக் கொண்டிருந்தன. கீதா. 25 வயது பெண்மணி. சூம்பிப் போன கை கால்களுடன் நினைவிழந்து மருத்துவமனையில் கிடக்கிறார். அவரது மூளை செயலிழந்து விட்டது. அவரது கைகளிலும் மூக்கிலும் ரப்பர்குழாய்கள் பொருத்தப்பட்டு சத்துநீரும்பிராணவாயுவும் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதிசய மனிதப் பிறவிபோல எலும்பும் தோலுமாக தோற்றமளிக்கும் அவர் பிறவியிலேயே கடுமையான நோய் தாக்கப்பட்டவரா; அல்லது உடல் ஊனமாகிப் போனவரா? இல்லை. நிச்சயமாக இல்லை. ஆறு மாதங்களுக்குமுன் அவர் திடகாத்திரமான பெண், மூன்று குழந்தைகளுக்குத் தாயான உழைக்கும் பெண் விவசாயி.

மேற்கு ராஜஸ்தானைச் சேர்ந்த கீதா, மூன்றாவதுகுழந்தை பிறந்ததும் 'ட்யூபெக்டமி' கருத்தடை செய்து கொண்டார். அரசு மருத்துவமனைகளில் நம்பகமான பாதுகாப்பான—பிரபலமான கருத்தடை முறையாக ட்யூபெக்டமி ஏற்கப்படுகிறது. ஆனால் அதுவோ கீதாவின் வாழ்வையே சூன்யமாக்கி விட்டது. அருகில் வந்து நின்று ஆசையோடு 'அம்மா' என்றழைக்கும் தனது குழந்தைகளையே கூட அடையாளம் தெரியாமல் பேந்தப் பேந்த விழிக்கிறார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூர் மருத்துவமனையின் அதே வார்டில் கீதாவுக்குச் சற்றுத்தள்ளி நடைபிணமாக படுக்கையில் கிடக்கிறார் சுமன்சேத்தியா. பதினெட்டு மாதங்களுக்குமுன் அரசின் குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரத்தைப் பார்த்து தானே முன்வந்து மாவட்ட மருத்துவமனையில் லேப்ராஸ்கோப் முறையிலான கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டார். அறுவை சிகிச்சை முடிந்த அரைமணி நேரத்தில் மயக்கம் தெளிவடைய வேண்டிய சுமன்சேத்தியா கிட்டதட்ட மூன்றுமாதங்கள் மயங்கிய நிலையிலேயே கிடந்தார். அவரது கைகால்கள் விழுந்து விட்டன. அவரால் உணவு உட்கொள்ளவோ, ஏன், அவர்மேல் உட்காரும் ஈயை விரட்டக்கூட முடியாது. இரு குழந்தைகளுக்குத் தாயான அவர், தொடர்ந்த சிகிச்சைக்குப்பிறகு தனது பெற்றோரின் உதவியுடன் மெள்ள மெள்ள நடக்க முயற்சிக்கிறார்.

'இது ஏதோ விதிவிலக்கானது; இதைப் பெரிதுபடுத்தி கருத்தடை சிகிச்சையே ஆபத்தானது என்று கருதிவிட முடியாது'என்று மருத்துவர்கள் வாதிடுகின்றனர். ஆனால் மருத்துவ பத்திரிக்கைகளில் வரும் அறிக்கைகளும் சுகாதார ஊழியர்கள், மற்றும் கருத்தடை செய்து கொண்ட பெண்களது அனுபவங்களும் 90 சதவீத மக்கள்கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்என்பதை அறைந்து கூறுகின்றன. அதிலும், குறிப்பாக பெண்கள்தான் கடுமையாக பாதிக்கப்பட்டு முடமாகிப் போகிறார்கள் என்பதை நிரூபித்துள்ளன

லேப்ராஸ்கோப் கருத்தடைச் சாதனம் பெண்களின் அடிவயிற்றில் கீறிபொருத்தப்படுகிறது. வயிற்றின் சுற்றுச் சுவரை உயர்த்தி இதைச் சரியாகப் பொருத்துவதற்காக அறுவை சிகிச்சையின்போது குறிப்பிட்ட அழுத்தத்தில் கார்பன்-டை-ஆக்சைடைச் செலுத்தி வயிற்றை வீங்கச் செய்வர். உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைப்படி கார்பன்டை ஆக்சைடை மட்டுமே இச்சிகிச்சையின்போது பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இந்த வாயு மட்டுமே விரைவாக ரத்தத்தில் கரையக்கூடிய தன்மை கொண்டது.

ஆனால் அரசு மருத்துவமனை எனப்படும் கசாப்புக் கடைகளில் லேப்ராஸ்கோபிக் கருத்தடை அறுவை சிகிச்சையின்போது, கார்பன்டை ஆக்சைடுக்குப் பதிலாக சாதாரண வெளிக்காற்றையே செலுத்துகின்றனர். குறிப்பிட்ட அழுத்தத்தில் செலுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் கவலைப் படுவதில்லை. இதில் கொடுமை என்னவென்றால், பெரும்பாலான இடங்களில் இதற்கான கருவிகள் கூட இல்லாமல், சாதாரண சைக்கிள் பம்பை வைத்து காற்றடித்து அறுவை சிகிச்சையை நடத்தி முடித்து விடுகின்றனர்.

சரியான அழுத்தத்தில் செலுத்தாவிடில் காற்றுக் குமிழ்கள் ரத்தத்தில் உருவாகி அது சுரப்பிகளைத் தாக்கும். இதன் விளைவாக பிற உறுப்புகளும்



லேப்ராஸ்கோபிக் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு கைகால்கள் விழுந்து, பெற்றோர் உதவியுடன் நடக்க முயற்சிக்கும் சுமன் சேத்தியா.



படிப்பகம்

www.padippakam.com



கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஆறுமாத காலமாக நினைவிழந்து மருத்துவ மனையில் உயிருக்குப் போராடும் கீதா.

பாதிக்கப்பட்டு உயிருக்கே ஆபத்தாக முடியும். இப்படிப்பட்ட மிருகத்தனமான அறுவை சிகிச்சையின் விளைவுதான் கீதா மற்றும் சுமன் சேத்தியாவின் இன்றைய பரிதாபத்துக்குரிய நிலைமை.

"அது கசாப்புக் கடை போன்றது. அறுவை சிகிச்சை நடக்கிறது. மயங்கிய நிலையில் இருக்கும் பெண்ணை தூக்கி வந்து வெளியே கிடத்துகின்றனர். உறவினர்கள் அப்பெண்ணைச் சூழ்ந்து கொள்கின்றனர். அடுத்து வேறொரு பெண்ணைக் கொண்டு வந்து கிடத்துகின்றனர். மருத்துவ மனை வளாகம் பிணவறை போல மாறிவிடுகிறது. அறுவை சிகிச்சை முடிந்ததும் வெறுந்தரையில் படுக்க வைப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பற்றி மருத்துவர்கள் அக்கறைப்படுவதில்லை. இதைக் கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால் வலி நிவாரணி ஏதும் கொடுக்கப்படாததால் அறுவை சிகிச்சை செய்தபின் அந்த பெண்களின் கதறல்கள் மரணஓலம்போல் இப்போதும் என் காதுகளில் எதிரொலிக்கிறது" என்று வேதனையோடு கூறுகிறார் டாக்டர் பிரிதாம் பால்.

"வறட்சியால் பாதிக்கப்பட்டு பட்டினியால் வாடும் நாட்டுப்புற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையை வீசி கருத்தடை செய்வது அயோக்கியத்தனமானது. உடல் உறுப்புக்களை விற்பது சட்டப்படி குற்றமென்றால், மனிதனின் இனப்பெருக்க ஆற்றலையே விலைக்கு வாங்கும் அரசும் கிரிமினல் குற்றவாளிதான்' என்று சாடுகிறார் ஒரு மருத்துவர்.

பாசிசத்தாய் இந்திரா அவசர நிலையை அறிவித்து அமுலாக்கிய போது, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தீவிரமாக்கப்பட்டது. பாசிச இளவரசர் சஞ்சய் காந்தியும் தனது ஐந்து அம்சத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை முக்கியத்துவமாக கருதி தனது குண்டர்களைக் கொண்டு தீவிரமாக நடைமுறைப் படுத்தியபோது, கசாப்புக் கடைக்கு இழுத்துச் செல்லப்படும் மிருகங்கள்போல மக்கள் கட்டாய அறுவை சிகிச்சைக்கு நிர்பந்திக்கப்பட்டனர்.

அதன்பிறகு ஆட்சிக்கு வந்த ஜனதா அரசு, மக்களின் அதிருப்தியைக் கண்டஞ்சி குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை குடும்ப நலத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்தது. மற்றபடி, இலக்கு நிர்ணயித்து அறுவை சிகிச்சை செய்வதோடு கூடவே, தாய்—சேய் நலம், சத்துணவு முதலான அம்சங்களும் குடும்பநலத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. ஆனால் கருத்தடை அறுவை சிகிச்சைக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தாய்சேய் நலம் நடைமுறையில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு 3256 கோடி ரூபாய் ஒதுக்கிய அதேசமயம் தாய்—சேய் நலம், பேறுகால பராமரிப்பு முதலான வற்றுக்கு வெறுமனே 888 கோடியைத்தான் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு புரோக்கர்கள் மூலம் அப்பாவி மக்களை இழுத்து வந்து இலக்கை முடிக்கும் வெறியோடு அறுவை சிகிச்சை செய்வதோடு கூடவே, அரசு இப்போது வஞ்சகமான ஒரு திட்டத்தை அரங்கேற்றி கட்டாய கருத்தடை திட்டத்தை தீவிரமாக்கி வருகிறது. வறுமை ஒழிப்புத் திட்டத்தோடு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தையும் சேர்த்து அமுலாக்கும் புதிய தாக்குதல்தான் அது. எங்கெல்லாம் வறுமை ஒழிப்பு—வறட்சி நிவாரணத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவோ அங்கெல்லாம்உதவி—அன்பளிப்பு — சலுகைகளோடு கருத்தடை திட்டமும் வெறியோடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கடந்த ஆண்டு ராஜஸ்தானில் கருத்தடை செய்து கொள்ளும் விவசாய குடும்பங்களுக்கு இலவச மின் இணைப்பு தரப்படும் என அரசே அறிவித்தது. பஞ்சம் பாரித்த ஒரிசாவில், வறட்சி நிவாரணக் கூலி வேலைக்கு வரும் விவசாயிகள் கட்டாய கருத்தடைக்குப் பின்னரே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ராஜஸ்தானில் நிலவிய வறட்சி நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு கருத்தடை அறுவை சிகிச்சையைத் தீவிரமாக்கிய மாநில அரசு சிறப்பு பரிசுகளையும் ஊக்கத் தொகையையும் அறிவித்தது.

தனிநபர்களோ அல்லது சமூக சேவை நிறுவனங்களோ கருத்தடைக்கு நாலாயிரம் பேரைக் கொண்டு வந்தால் ஒரு 'கான்டெசா' கார் பரிசு! மூவாயிரம்பேரை இழுத்து வந்தால் ஒரு மாருதிகார் பரிசு! இரண்டாயிரம் பேரைக் கொண்டு வந்தால் ஒரு வீடியோ ஒளிப்பெட்டி பரிசு. இதுதவிர எண்ணற்ற ஆறுதல் பரிசுகள். லாட்டரி சீட்டுபோல குடும்பக் கட்டுப்பாடு திட்டமும்ஒரு சூதாட்ட வியாபாரமாகிவிட்டது. இத்தனைக்கும் திட்டமிட்ட இலக்கைவிட கூடுதலாக ஆள்பிடித்து அறுவை சிகிச்சை செய்வதில்தொடர்ச்சியாக முன்னணியில் நின்று மத்திய அரசின் பரிசைப் பெறும் மாநிலம் தமிழகம்தான்.

அவசரநிலை ஆட்சியின்போது ஏற்பட்ட அனுபவத்தைப் படிப்பினையாக்கிக் கொண்டு ஆட்சியாளர்கள் இப்போது ஆண்களை விட பெண்களுக்கு கருத்தடை செய்வதிலேயே குறியாக இருக்கிறார்கள். புதிய புதிய சோதனை



படிப்பகம்

www.padippakam.com

முயற்சிகள் பெண்ணினத்தின் மீது வலுக் கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. அவசர நிலை பாசிச ஆட்சியின்போது 61.9 லட்சம் ஆண்களுக்கும் 20.6 லட்சம் பெண்களுக்கும் கட்டாய கருத்தடை செய்யப்பட்டது. ஆனால் 1985—86ல் ஆறு லட்சம் ஆண்களுக்கும் அதே சமயம் 42.6 லட்சம் பெண்களுக்கும் கருத்தடை செய்யப்பட்டுள்ளதாக அரசே ஒப்புக் கொள்ளுகிறது.

மேலும், புழக்கத்தில் உள்ள கருத்தடைசாதனங்கள் முறைகளில் பெரும்பாலும் பெண்களுக்கானவையே அதிகம். பெண்கள் ஆண்டு, மகளிர் முன்னேற்றம் என்று பித்தலாட்டம் செய்யும் அரசு, அப்பட்டமாகவே ஆணாதிக்க வெறியைத்தான் இதிலும் காட்டுகிறது. ஏகாதிபத்திய நாடுகளில் அறிமுகப்படுத்தப்படும் புதிய கருத்தடை முறைகளுக்கும் —சாதனங்களுக்கும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாட்டுப் பெண்கள்தான் பரிசோதனைக் களமாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

குடும்பக்கட்டுப்பாடு என்னும் உயிர்க்கொல்லி வியாபாரம் மனித இனத்துக்கே எதிரானது. மனித குலம் தனது இனத்தை விருத்தி செய்து கொள்வது இயற்கை நியதியாகும். அதை அழிக்கவோ தடை செய்யவோ எந்த அரசுக்கும் உரிமையில்லை. ஒவ்வொரு குடிமகனுக்கும் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழில் முதலானவற்றுக்கு உத்திரவாதம் தருவது அரசின் கடமை. ஆனால் மக்கள் விரோத இந்திய அரசு, இப்பொறுப்புகளைத் தட்டிக் கழித்துவிட்டு, மக்கள் தொகை பெருக்கம்தான் நமது வறுமைக்குக் காரணம் என்று கட்டாய கருத்தடையை நியாயப்படுத்துகிறது.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் வெறும் வாயோடு மட்டும் பிறப்பதில்லை. உழைக்க இரு கரங்களுடனும்தான் பிறக்கின்றன. மக்கள் தொகை பெருக்கம் நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்பதற்கான அடிப்படையே இல்லை. அதே சமயம் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறுவது தாய்மார்களின் உடல் நலத்திற்கு எதிரானதாக, உருவாகி வரும் புதிய தலைமுறையின் உடல் நலத்திற்கு எதிரானதாக அமைவதாக இருந்தால் மட்டுமே ஒட்டுமொத்த சமூகத்தின் நன்மையைக் கருதி கருத்தடை செய்வதை நாம் ஏற்கமுடியும்.

இனி, கோடானு கோடி கீதாக்களும், சுமன் சேத்தியாக்களும் முடிவு செய்யவேண்டும், கசாப்புக் கடை வியாபாரமான கருத்தடை அறுவை சிகிச்சை அவசியம்தானா என்று.

● குமார்

# தற்கொலைதான் தீர்வா?

## பயிர் பொய்த்ததால் உயிர் போக்கிய பருத்தி விவசாயிகளின் துயரக்கதை

ஆந்திராவின் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டா ரெட்டி ஒரு நடுத்தர பருத்தி விவசாயி. தனது எட்டு ஏக்கர் நிலத்திலும் குத்தகைக்கு எடுத்த நாலு ஏக்கர் நிலத்திலும் குடும்பத்தோடு நெற்றி வியர்வை நிலத்தில் விழ கடுமையாக உழைத்தார் ஆனால் விவசாயம் என்பதே இயற்கையோடு நடத்தும் சூதாட்டமாகி விட்ட பிறகு அவரால் எப்படி முன்னேற முடியும்?

கடந்த நான்கு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து, வறட்சி நீடித்ததால் அவரது கடன் சுமை ரூ. 80,000க்கும் மேலானது. வங்கிகளிடமும் வட்டிக் கடைகளிலும் தன் மனைவியின் நகைகளை அடகு வைத்து கடனை அடைக்க முயற்சித்தார், முடியவில்லை. இதற்கிடையே வட்டி செலுத்தாவிட்டால் நகைகளை ஏலம் விடப் போவதாக வங்கிகளும் வட்டிக்கடைக்காரர்களும் அச்சுறுத்தினர். அவரால் வெளியே தலைகாட்ட முடியவில்லை. மனமுடைந்து போன அவர் மனைவி அஞ்சம்மாவுக்கு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. கொடிய விஷமான நவக்ரான் பூச்சி மருந்தை விழுங்கி மயங்கிய அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

வங்கிகளில் பயிர்கடன் வாங்கிய ஆஞ்சனேயலு என்ற விவசாயிக்கு பருத்தி விளைந்தால்தானே கடனை அடைக்க முடியும்? கடன் சுமையால் எல்லாவற்றையும் இழந்துவிட்ட அவர், ஒரே ஒரு கறவை மாட்டை வைத்துக்கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். லேவாதேவிக்காரர்கள் அந்த ஒரே மாட்டையும் இழுத்துச் சென்றதும் துக்கம் தாளாமல் விரக்தியடைந்த அவர் இளம் மனைவி பூச்சிமருந்தைக் குடித்து தன்னை மாய்த்துக் கொண்டார்.

பொங்கலூரு என்ற கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஸ்வரா என்ற நடுத்தர விவசாயி, இந்த ஆண்டாவது மழை பெய்யும், பருத்தி விளையும் என்ற நம்பிக்கையோடு வங்கியில் பயிர்க்கடன் ரூ 5000 வாங்கினார். கடந்த மூன்று ஆண்டுகளாக உரக் கடைகளில் கடன் வாங்கியும், குடும்பத்திலிருந்த நகைகளை அடகு வைத்தும் ஏற்கனவே நொடித்துப் போயிருந்தார்.

இவ்வாண்டும் விவசாயம் பொய்த்ததால் தனது தந்தையால் தனக்கு திருமணம் செய்து வைக்க வாய்ப்பே இல்லை என்று மனமுடைந்து போன அவர் மகள் கிணற்றில் விழுந்து தற்கொலை

வறட்சியாலும் வெள்ளைப் பூச்சியாலும் தாக்குண்ட பருத்திச் செடிகள். பாதிக்கப்பட்டது பயிர்கள் மட்டுமல்ல, விவசாயிகளும்தான்.



www.padippakam.com

செய்து கொண்டார்.

பொங்கலூரு கிராமத்தில் மட்டும் இதுவரை 8 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்கள்தவிர நாலு சவரன் நகையை பருத்தி விவசாயத்தில் தன் கணவர் கோட்டை விட்டதால் பிறந்த வீட்டிற்கு செல்ல முடியாமல் மனம் வெறுத்த பத்மா, பருத்தி விவசாய சூதாட்டத்தில் கடந்த நாண்காண்டுகளுக்குள் ஒரு லட்ச ரூபாயைத் தனது கணவரும் தந்தையும் தொலைத்து கடனாளியாகிப் போனதை எண்ணி விரக்தியுற்ற லட்சுமி—என்று பட்டியலிட முடியாத அளவுக்கு தற்கொலைகள் தொடருகின்றன.

ஆந்திர மாநிலத்தின் நாற்பது சதவீத பருத்தியை—ஏறத்தாழ 20 லட்சம் குவிண்டால்கள்—உற்பத்தி செய்யும் குண்டூர், பிரகாசம் ஆகிய மாவட்டங்கள் தொடர்ச்சியான வறட்சியாலும் புயல்தாக்குதலாலும் நிலைகுலைந்து போனது. இதோடு வெள்ளைப் பூச்சிகளின் தாக்குதலால் பருத்தி விவசாயமே செல்லரித்துப் போய்விட்டது. விவசாயக் குடும்பங்களின் தற்கொலை சோகக் கதைகளோடு இப்போது பட்டினிச் சாவுகள் பற்றிய செய்திகளும் வருகின்றன. கடந்த ஆண்டு வறட்சி நிலவிய மெகபூப்நகர் மாவட்டத்தின் பட்டினிச் சாவுகள் பட்டியலையே விஞ்சுமளவுக்கு பிரகாசம் மாவட்ட பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கை நீண்டுகொண்டே போகிறது. பணப்பயிர் விவசாயத்தின் மூலம் செல்வாக்கோடு வாழ்ந்த பருத்தி விவசாயிகள் பஞ்சம் பிழைக்க கர்நாடக மாநிலத்துக்கு ஓடுகிறார்கள்.

வறட்சியும் பஞ்சமும் தாக்குவது ஒருபுறமிருக்க உரம்—பூச்சி மருந்து வியாபாரிகள் தரங்குறைந்த பூச்சி மருந்தை அமைச்சர்கள்—அதிகாரிகளின் ஒத்துழைப்போடு விவசாயிகளுக்கு விற்று கொள்ளை லாபமடித்தனர். பயிரைத் தாக்கும் வெள்ளைப் பூச்சிகள் மருந்தினால் சாகிறதோ இல்லையோ, விவசாயிகள் சாவது மட்டும் நிச்சயம். ஆத்திரமுற்ற விவசாயிகள் மோசடி பூச்சி மருந்து வியாபாரிகளைக் கைது செய்யக் கோரியதைத் தொடர்ந்து அரசு இப்போது விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளது.

பாசிச சன்னியாசி என் டி. ஆருக்கோ பாசிச இளவரசர் ராஜீவுக்கோ வறட்சியால் பாதிக்கப்பட்டுமாண்டு போகும் விவசாயிகள்மீது கிஞ்சித்தும் அக்கறையில்லை. மத்திய அரசு போதிய அளவு நிவாரணம் தரவில்லை என்று மாநில அரசும், மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று மத்திய அரசும் மாண்டுபோன விவசாயிகளை வைத்து அரசியல் லாவணி நடத்திக் கொண்டிருக்கின்றன.

பாசிச கும்பலின்புதிய ஜவுளிக் கொள்கை நெசவாளர்களை வீதியில் நிறுத்தியதோடு பருத்தி விவசாயிகளையும் பஞ்சைப் பராரிகளாக்கி தற்கொலைக்கும் தள்ளிவிட்டுள்ளது. பாசிச கும்பல் பீற்றிக் கொள்வதுபோல வறட்சி நிவாரணமும், ஐந்தாண்டுத் திட்டங்களும் பிரகாசம் மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு மண்ணும் செய்யவில்லை. அரசு போடும் பிச்சைக்காக பச்சை அட்டைகளை ஏந்தி அவர்கள் அலைகிறார்கள்.

லட்சத் தீவுகளில் உல்லாச ஓய்வு, ஆந்திராவில்டிஸ்னிலேண்ட் எனும் குழந்தைகளுக்கான ஆடம்பர கண்காட்சி என்று வக்கிரமாக அரசுப் பணத்தை செலவழித்துக் கொண்டு விவசாயிகளை அறவே புறக்கணித்துவிட்டு கும்மாளமடிக்கிறது பாசிச கும்பல். அவமானத்திற்கும் கடன்சுமைக்கும் ஆளான விவசாயிகள் தங்களது தற்கொலைக்கும் பட்டினிச் சாவுக்கும் காரணம், இப்பாசிச கும்பல் தான் என்பதை விரைவில் உணர்ந்து ஒரு புரட்சியில் இறங்குவர். விவசாயிகளின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் அத்தகைய விவசாயப் புரட்சிதான் அவர்களது பிரச்சினைக்கு சரியான தீர்வாக அமையும். ●

உயிர்வாழ வேறு வழியில்லை; இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும் எண்ணையும் நிவாரணமாக அரசு தரும் பிச்சைக்கு அடையாள அட்டைகளை ஏந்தி முண்டியடிக்கும் பருத்தி விவசாயிகள்.



படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: இரத்தத்தால் எழுதப்படும் வரலாறு!

ஈழத் தமிழ்ப் பெண்கள் இரத்தத்தால் வரலாறு எழுதுகிறார்கள். துருக்கியர் படையெடுப்பின்போது இந்திய இராஜபுத்திரப் பெண்கள்—கற்பழிப்புக்கு 'அஞ்சி' உயிரோடு கொளுத்தப்பட்டதாக, கூண்டோடு தற்கொலை செய்துகொண்டதாக வரலாற்றில் படித்தோம். இந்தியப் பிரிவினையின்போது மதவெறியர்களின் கற்பழிப்பு—படுகொலையிலிருந்து தப்பிக்க கூட்டு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு கும்பல் கும்பலாகச் சீக்கியப் பெண்கள் தற்கொலை செய்து கொண்ட கதைகளைக் கேட்டோம்.

இதோ, வேறு வகையான வீரதீரமிக்க வரலாறு எழுதுகிறார்கள் ஈழத் தமிழ்ப் பெண்கள். இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு, படுகொலை, கற்பழிப்புக்கு அஞ்சி ஈழத் தமிழ்ப் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லை.

கற்பழிப்பு—எதிரிகள் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒருவகை சித்திரவதையாகவே கருதுகிறார்கள். ஆயுதமேந்தி எதிரிகளின் உயிரைப் பறிப்பதுதான் அந்தக் கிரிமினல் குற்றத்துக்குரிய தண்டனை. எனவே எதிரி ஆக்கிரமிப்புக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொள்வதற்குப் பதிலாக, அகதிகள் முகாம்களில் தஞ்சமடைவதற்குப் பதிலாக, கற்பழிப்பை சொந்த அவமானமாகக் கருதி தற்கொலை செய்து கொள்வதற்குப் பதிலாக, ஆயுதமேந்திப் போராளிகளாக மாறுகிறார்கள். 1000 பேருக்கு மேலாகப் பெண் போராளிகள் இருப்பதாக எதிரிகளே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

சிறுவர்—சிறுமியர்கள், வயதான தாய்மார்களும் கூட ஈழ ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதங்களும், உணவுப் பொருட்களும், செய்திகளும் கொண்டு போய் போராளிகளுக்கு உதவுகின்றனர்.

போரில் நேரடியாக ஈடுபடமுடியாத தாய்மார்கள் எதிரிக்கு எதிரான அரசியல் போரை நடத்துகின்றனர். அன்னையர் முன்னணி சார்பாக 20 நாட்களுக்கு மேலாக சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார் அன்னம்மா டேவிட். இராணுவத்தின் கெடுபிடிகளுக்கும் அஞ்சாமல் தினந்தோறும் பல தமிழ்ப் பெண்கள், சிறுவர்—சிறுமியர்கள் கூடி அவர்களுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதமிருக்கின்றனர்; இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் போரை உடனடியே நிறுத்த வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர். திலீபனின் தியாகம் ஈழத் தமிழரிடையே ஏற்படுத்திய ஆவேசத்தைப் போலவே அன்னம்மாவின்போராட்டமும் செய்யும்!



சாகும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்ட அன்னையர்
அன்னம்மா, திருமதி. நேசம்மா.



யாழ் மாவட்டம் 'அளவெட்டி'யில் இந்திய ராணுவ கவச வா
கண்ணி வெடியில் தகர்த்த பெண் புலிகள்.

இந்திய இராணுவம்; "திரி ஸ்டார்" எனப்படும் ஈழ துரோக
அமைப்புகளின் சமூக விரோதிகளோடு





படிப்பகம்

www.padippakam.com

48 மணி நேரத்தில் போராளிகளிடமிருந்து ஆயுதங்
ளைப் பறித்து ஈழத்தில் அமைதியை நிலைநாட்டுவ
க சவடால் அடித்த பாசிச ராஜீவ் கும்பல் ஏழு
தங்களுக்குப் பிறகும் அது முடியாமற் போனதுகண்டு
யுற்றிருக்கிறது.

பிராந்திய ஆதிக்க வெறியில் மூழ்கிப் போயிருக்கும்
சிச ராஜீவ் கும்பல் ஈழப்போரில் இந்திய சிப்பாய்கள்
யாவதும், போரின் சுமை பல கோடியாவதும் அதி
ப்பதையும்கூட பொருட்படுத்தவில்லை. கடந்த பிப்
ரி மாதத்தில் மட்டும் 75க்கும் மேற்பட்ட இந்திய
ாணுவத்தினர் ஈழப்போரில் பலியானார்கள். ஒரு
சத்துக்கும் மேற்பட்ட படையைக் குவித்தும் சில
ிரம் பேரேயான போராளிகளை சமாளிக்க முடியா
சிக்கிக் கொண்டுள்ளார்கள். கடத்தல், கற்பழிப்பு,
றிகொண்ட படுகொலைகள் ஆகியவற்றில் ஈடுபடும்
திய இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டில் வைப்பது
. இயலாததாகிவிட்டது. அடிக்கடி இராணுவ சிப்
பகளை மாற்றுவது, சென்னை—தாம்பரம் விமானப்
டத் தலத்தில் சுங்கச்சாவடி அமைப்பது ஆகிய நட
க்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவையும் இரா
வத் தலைமைக்கு எதிரான ஆத்திரத்தையும் கலக
ார்வையும் தோற்றுவித்துள்ளன.

தெற்கு ஆசிய பிராந்தியத்தில் தனது மேலாதிக்
தை நிறுவித் தக்க வைத்துக் கொள்வதுதான் பாசிச
ீவ் கும்பலின் நோக்கம். இதற்காக தனது
மையான உத்திகளையே அது மேற்கொண்டுள்ளது.

ரி ஸ்டார்'' எனப்படும் ஈழ துரோக அமைப்பு
ன் சமூக விரோதிகளைக் கொண்டு விடுதலைப்
ாராளிகளைப் படுகொலை செய்வது; அதற்காக ஆயு
நிதி, பயிற்சியளித்து செல்லப்பிள்ளையாக வளர்த்து
விடுகிறது. போராளிகளுக்கு எதிராக முஸ்லீம்தமிழ்
களைத் திருப்பி வகுப்புக் கலவரத்தைத்தூண்டுவது;
ற்காக முஸ்லீம்தமிழர்களில் சிலரைக் கொன்றுவிட்டு
ாளிகள்மீது பழிபோடுகிறது. சிங்கள—தமிழ் இனக்
வரத்தைப் பெருமளவு தூண்டிவிடுவதற்காக இரு
வு மக்களையும் இரகசிய உளவாளிகளைக் கொண்டு
கொலை செய்கிறது; சிங்கள—தமிழ் பயங்கரவாதி
ன் கைவரிசைகள்தாம் இவை என்று பழி போடு
து.

சென்றமாத இறுதியில் சிவராத்திரியன்று
ழும்பு பம்பலப்பட்டி மாணிக்க விநாயகர் கோவிலில்
டிகுண்டு வீசியது, இந்த மாதம் இலங்கையின் வட
தியிலுள்ள ரோடாவேவாவில் பஸ் பயணிகளை
த்து நடந்த படுகொலைகள் செய்தது ஆகியன
ற்கான உதாரணங்கள். ஈவிரக்கமற்ற படுகொலை,
பழிப்பு, ஆகிய இராணுவ பயங்கரவாதஅடக்குமுறை
வடிக்கைகள் மூலம ஈழத்தமிழரிடையே பீதியை
வாக்க முயல்கிறது. மறுபுறம் மாகாணத் தேர்தல்
ள நடத்தி அரசியல் தீர்வுகாண முயற்சிப்பதாகக்
டிக் கொள்வதற்காக ஜெயவர்த்தனே கும்பலை
பந்திக்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலின் இந்த இராணுவ,
சியல் உத்திகள் எதுவுமே பலிக்காது என்பதே
சயம். இந்த உண்மையை இந்தியப் பத்திரிக்கை
ள ஒப்புக்கொள்ள ஆரம்பித்து விட்டன. இந்திய
ாணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்றுதான்
நம்பான்மையான சிங்கள—தமிழ் மக்கள் விரும்பு
ார்கள்; அதை ஏற்று இந்திய இராணுவத்தை வெளி
ற்றும் முழக்கத்தை முன்வைக்கும் கட்சிகளே இலங்
த் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்கிற நிலைமை
வாகி உள்ளது. இதற்கு மாற்றாக (போலிக்
யூனிஸ்டுகள் சோசலிசவிஸ்டுகள் அடங்கிய) இடது
அணியை உருவாக்குவதற்கு பாசிச ராஜீவ் கும்பல்
லுகிறது./ஈழத்தில் தொடரும் இந்திய ஆக்கிரமிப்பு
ர்ப்புப்போரும், தெற்கே அதிகரித்துவரும் பயங்கர
நடவடிக்கைகளும் ராஜீவ்—ஜெயவர்த்தனேகும்ப
பகற்கனவுகளைத் தவிர்க்கின்றன.

● மணி

## பின்னி என்ஜினியரிங் ஆலை:

# தொழிற்சங்க கையாலாகாத்தனம்

தமிழகத் தொழிலாளர் இயக்கத்தின் இன்லறய நிலைமையைப் படம் பிடித்துக் காட்டும் நல்ல உதாரணமாக விளக்குகிறது பின்னி என்ஜினீரியங் தொழிற்சாலை விவகாரம். 24 மாதக் கதவடைப்புக்குப் பிறகு கடந்த மாதம் அந்தத்தொழிற்சாலை திறக்கப்பட்டது. திருமண விழாவோ, அரசியல் கட்சி மாநாடோ என்று வியந்து போகும் அளவு கோலாகலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நாதசுரம் முழங்கியது, அலங்கார வளைவுகள், வரவேற்புகள் தடபுடலாக இருந்தன.

அரசியல் கட்சிகளையே ஆட்டிப் படைக்கின்ற சாராய உடையார் என்றறியப்படும் ராமசாமி உடையார்தான் விழாவின் நாயகன்—நாயகன் சினிமா கதாநாயகனைப் போன்றவர்தான் இவரும்.

எம்ஜிஆரின் பினாமியாகத் தொடங்கி தமிழகத்தின் சாராய் வடித் தொழிலின் ஏகபோக முதலாளி ஆகி கோடி கோடியாகச் சேர்த்த புதுப் பணக்காரர், புது முதலாளி. சென்னை புறநகர் பகுதியில் உள்ள புறம்போக்குகளை வளைத்துப் போட்டுக் கொண்டதோடு, தனியார் வீடு—மனை விற்பனைகளில் குறுக்கிட்டு பலாத்காரமாக வளைத்துப் போட்டு வருபவர். சென்னை—பல்லாவரத்தில் அற்பத் தொகைக்கு இராணுவ நகரிய நிலத்தை சுருட்டிக் கொள்ள முயன்று, விவகாரம் அம்பலமானதால் விட்டுக் கொடுத்தவர். கூட்டாளி எம்ஜிஆரின் பெயரிலேயே சுயநிதி மருத்துவக் கல்லூரி நிறுவியவர். சென்னை—தங்கமீன் வியாபாரத்தில் ஏகபோக முதலாளி. இப்போது வீரப்பன்—ஜானகி கும்பலின் புரவலர். காங்கிரசிலும் காலூன்ற முயலுபவர். தனது செல்வாக்கிற்கு வசதியாக சுதேசமித்திரன் பத்திரிக்கையையும் வாங்கி நடத்த இருக்கிறார்.

கிடைத்ததை எல்லாம் வாங்கிப் போடக் கிளம்பியுள்ள இந்தக் கருப்புப் பண முதலை பின்னி என்ஜினீரிங் ஆலையை ''வாங்கியிருக்கிறது'' அதைக் கொண்டாடுவதோடு ஆலை மீண்டும் திறக்கப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளாக ஆலை முதலாளிகள் மேற்கொண்டு வரும் அதே உத்தியைத்தான் பின்னி நிர்வாகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தியது. ஆலையை நவீனப்படுத்தவும், அரசு மூலதனத்தை சகாயங்கள்—சலுகைகளுடன் கடனாகப் பெறவும், தொழிலாளர்கள் பலரை கழித்துக்கட்டவும் ''நலிவுற்ற ஆலை'' என்கிற நாடகமாடத் தொடங்கியது. இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டு விட்டதென்று கூறி 1986 ஜனவரியில் கதவடைப்பு செய்தது ஆனால் 1982—83இல் 7.41 கோடி ரூபாய், 1983—84இல் 9.06 கோடி ரூபாய், 1984—85இல் 12.81 கோடி ரூபாய் 1985 இல் ஏழே மாதங்களில் 8.29 கோடி ரூபாய் என்று கம்பெனியின் உற்பத்தியளவோபெருகிக் கொண்டேபோயிருக்கிறது. நட்டம் என்பது பச்சைப் புளுகு.

1200 தொழிலாளர்கள் உழைக்கும் இந்தக் கம்பெனியின் தொழிற்சங்கம் ''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு'' கட்சியின் சி ஐ டி யு.தான். 1978—79 டி.வி.எஸ்—சிம்கோ மீட்டர் போராட்டங்களுக்குப் பிறகு காயடிக்கப்பட்ட நிலையில் உள்ள இந்த தொழிற்சங்கம் வழக்கம் போல அறவழிகளிலும் சட்ட வழிகளிலும் போராடக் கிளம்பியது. தொழிலுறவு கமிஷனர், தமிழக அரசு,

www.padippakam.com

உயர்நீதி மன்றம் ஆகிய மூன்றும் கதவடைப்பை சட்ட விரோதமென்று அறிவித்து ஆலையைத் திறக்கும்படி தீர்ப்பளித்தனர். ஆனாலும் நிர்வாகம் மசியவில்லை. அதற்குமேல் செய்வதறியாது செக்குமாடு போல சட்ட வழியைச் சுற்றிச் சுற்றி வந்தது தலைமை.

இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பின்னி என்ஜினீரிங் ஆலையை "வாங்கி நடத்த" முடிவு செய்தார் உடையார். ஏதோ உடையார் மூலதனத்தை கொட்டி தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கப் போகிறார் என்கிற பிரமை உருவாக்கப்பட்டது. ஆனால் மேலிடத்தில் நடந்த பேரங்கள் பலருக்கும் தெரியாது.

உடையார் 25 சதவிகித மூலதனம் போட்டால் போதும் அரசுடமை ஆக்கப்பட்ட கெனரா வங்கி 100—125 லட்சங்கள்வரை நடப்பு முதலீடு போடும். அது தவிர ஏற்கனவே அந்த வங்கியிடமிருந்து 72 லட்சம் வரை உபரியாகப் பெறும் வசதி கம்பெனிக்கு உண்டு. அதேபோல நவீனமயமாக்குவதற்கும், சீரமைப்பதற்கும் தேவைப்படும் 4 கோடி ரூபாயில் 10 சதவிகிதம் மட்டும் உடையார் போட்டாலே போதும். மீதியை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி தரும்.



பின்னி எஞ்சினீரிங் தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் விழாவில் "சாராய" ராமசாமி உடையார்.

அரசு வங்கிகளும், உடையாரும் இப்படி மூலதனம் போடுவதற்குக் காரணமும் உண்டு. முதலாண்டு 9 முதல் 10 கோடி ரூபாய் இரண்டாம் ஆண்டு 13 முதல் 14 கோடி ரூபாய் வரை என்று ஐந்தாம் ஆண்டு 17 முதல் 18 கோடி ரூபாய் வரை இராணுவ (ஆர்டர்கள்) வியாபாரத்துக்கு குறிப்பாகப் பாலங்கள் அமைப்பதற்கு பின்னி எஞ்சினீரிங் ஆலை ஒப்பந்தம் போட்டுள்ளது.

இவ்வளவு வருமானமுடைய கம்பெனி இரண்டு ஆண்டுகள் சட்டவிரோதமான கதவடைப்பு செய்துவிட்டு முற்றிலும் தொழிலாளர் விரோத ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் திறக்கப்படுகிறது. கதவடைப்பு நடந்த 24 மாதங்களுக்கான ஊதியம் கொஞ்சம்கூடக் கிடையாது. உற்பத்தி இலக்குகள், விதிகளைக் கறாராகக் கடைப் பிடிக்கவேண்டும். ஆரம்பத்தில் நான்கு மணி நேரமே வேலைதரப்படும். வேலைகளை துணை-காண்டிராக்ட்க்கு விடுவதற்கு கம்பெனிக்கு உரிமை உண்டு. தொழிலாளர்களை வெவ்வேறு பிரிவுகள்—துறைகளுக்கு மாற்றுவதற்கு கம்பெனிக்கு அதிகாரம் உண்டு. கூடுதல் நேர வேலை, ஊக்க ஊதியங்கள், உணவு விடுதி (கான்டீன்) வசதிகள் ஆகிய எதுவும் கிடையாது. 1992ம் ஆண்டுவரையிலான இந்த ஒப்பந்த காலத்திற்கு ஊதிய உயர்வோ, படிகளோ வேறு எந்த ஆதாயங்களோ எதிர்பார்க்கக்கூடாது. அதாவது ஏறக்குறைய கொத்தடிமைகளாகப் பணி புரியவேண்டும.

ஆட்குறைப்போ, ஊதிய வெட்டோ இல்
டாலும் தமது உரிமைகள் அனைத்தையும் அடகு
கும் இந்த ஒப்பந்தத்தில் 1200 தொழிலாளர்களி
பேர் தனித்தனியே கையொப்பமிட்டு விட்டு வே
குத் திரும்பியுள்ளனர். சி. ஐ. டி. யு தொழிற்சங்
ஓரங்கட்டிவிட்டு நேரடியாகத் தொழிலாளர்க
ஒப்பந்தம் போட்டுள்ளனர். ஒப்பந்தத்தில்
கையெழுத்திட விரும்புவதாகக் கோர்ட்டுக்குப்
ருக்கிறது. சி.ஐ.டி யு. "இதற்கு எதற்குக் கோர்ட்
போகவேண்டும்!" என்று கேலி செய்கிறது நிர்வா

உரிமைகளை அடகுவைப்பதில் முன்னின்
காலி "மற்ற ஆலைகளில் 20 சதவிகிதம் போனஸ்
ஆண்டுகள் வேலை செய்தால் ஒரு சவரன் தங்கமு
கிறார்கள். எங்களுக்கும் ஏதாவது கொடுங்கள்"
கையேந்துகிறார். "எல்லாம்தரத்தான்
புகிறோம். எல்லாம் உங்கள்கைகளில் தான் இருக்
என்று சூசகமாக எச்சரிக்கிறார் புது முதலாளி
யார். உற்பத்தி விதிகளையும் இலக்குகளையும் க
பிடித்தாகவேண்டும். இல்லையானால் நடப்பது
என்கிற எச்சரிக்கைதான் இது! அல்லது ம
உழைத்தால் கம்பெனிக்குத் திருப்தி ஏற்ப
ஏதாவது தருவோம் என்று "ஆசை" காட்டப்படு
எம்ஜிஆர் பாணியில் மிரட்டுவதும், "தர்மம்"
தும் என்கிற தந்திரத்தைக் கையாள்கிறார் உடை

தொழிலாளர்களைத் கொத்தடிமைகளாக்கு
வெற்றி பெற்றுவிட்ட நிர்வாகம் அடுத்த கட்டமா
னப்படுத்துவது, சீரமைப்பது ஆகிய வழிகளில்
வேலைப்பளுவை ஏற்றவும், சிறப்புப் பயிற்சி,
வேலைகள் என்கிற பெயரில் பழிவாங்கவும்,
குறைப்புச் செய்யவும் முடிவு செய்துள்ளது.
வேலையைத் தக்க வைத்துக் கொண்டோம்
நிம்மதியோடு தொழிலாளர்கள் இனிமேலும் உ
முடியாது. கிடைத்தது போதும் என்கிற
தொகைக்கு தானே ஓய்வு பெறவேண்டும் அல்ல
டாய ஓய்வு பெறும்படி நிர்பந்திக்கப்படுவார்கள்

பின்னி என்ஜினீரிங் தொழிலாளர்கள் இவ்
தூரம் பணிந்து போனதற்குக் காரணம் தொழிற்
தலைமையின் கையாலாகாத்தனம் -மறைமுகத்
கம்தான் காரணம். தொழிற்சங்கத்தலைமையே
வழி, சட்ட வழிப்போராட்டங்கள் நடத்துவதைத்
வேறு மாற்று வழியே காணாமல் முடங்கி விடுகி
நீண்ட நாள் கதவடைப்பு காரணமாக 20க்கும்
பட்ட இண்டியா ஃபோர்ஜ் தொழிலாளர்கள் ம
போய்விட்டார்கள். இருந்தாலும் தொழிற்சங்கச்
மாடுகள் கோர்ட்டுகளையும் தொழிலுறவு அதிகாரி
யும் சுற்றிச் சுற்றி வருகின்றன. எனவே தனித்த
ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சரணடையும்படி
லாளர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

● அரசியல் வளர்க்கப்படாமல் பொருள
வாதத்துக்குள் மூழ்கிப்போன தொழிலாளர்க
அமைதியாகப்போராடும் போதும் தாக்கும் மு
கள்—அரசு குண்டர்படையிடமிருந்து தற்க
கொள்ள முடியாத நிராயுத பாணியான தொழிலா
● சட்டவிரோதமான கதவடைப்புகளை நீக்
நிவாரணமளிக்கவும் போடப்படும் உத்திரவுகளை
நிர்வாகம் புறக்கணிக்கிறது. கதவடைப்புக்கா
இயந்திரங்களையும் சரக்குகளும் அகற்றப்படுகி
இவற்றுக்கெதிராக எதுவும் செய்ய முடியாமல் த
தொழிலாளர்கள் ● பிறபகுதி தொழிலாளர்கள்,
சாயிகள், நடுந்தர மக்கள் ஆகிய பரந்துபட்ட மக்
மிருந்து தனிமைப்பட்ட தொழிலாளர்கள்—
நிலைமைகளுக்கு இன்றைய தொழிற்சங்கத்
மையே பொறுப்பாகும். இந்தப் பிரச்சினைகளுக்
யான தீர்வு அரசியல் படுத்தப்பட்ட, தற்க
பயிற்சியும், பரந்து பட்ட மக்கள் ஆதரவும் கொ
புரட்சிகரத் தொழிற்சங்கங்களை உருவாக்குவதுதா



படிப்பகம்

www.padippakam.com

# நாயகமே வெல்லும்!

ஜீவ் தலைமையில்இருந்த
உயர்மட்ட காங்கிரசு
தலைவர்களில் சிலர்
குடியரசு தலைவர் தேர்த
ண்டும் என்னை நிற்க வைக்
வெற்றி பெறச் செய்யவும்
கடி ரூபாயிலிருந்து 40
வரை செலவழிக்க தயாரா
தார்கள்.'' அந்நபர்களில்சிலர்
ம் இ. காங்கிரசில் இருக்கிறார்
முன்னாள் குடியரசு தலை
தலைவர் கியானி ஜெயில்சிங்
ரி மாத மத்தியில் சண்டே
க்கைககு அளித்த பேட்டி
பாது, காங்கிரசு தலைவர்
வைத்திருந்த மதிப்பை
ப்படுத்தும் அவசரத்தில்
டு உடைத்த ரகசியம் இது.

## தா 40 கோடி,
## ளுமன்றத்தை கலை''

ஜீவ் தலைமையிலான அர
கவிழ்க்கவும், தங்கள் தலை
லான இ. காங்கிரசு அரசை
பில் அமர்த்தவும் கியானி
சிங் வழி செய்ய வேண்டும்
வாக்குறுதியின் அடிப்படை
வர்கள் அப்பெருந் தொகை
ஜயில் சிங்கின் தேர்தல் வெற்
க செலவு செய்ய தயாராய்
ிருக்கிறார்கள். இதற்கு
சிங் பின்வாங்கியிருக்கிறார்.
ம், அவர் சொல்வது மாதிரி
யக அமைப்பின் மீது அவர்
டிருக்கும் ஆழ்ந்த பற்றி
அல்ல. மாறாக, அதிகார
தின் தலைமையைக் கைப்
ராஜீவுக்கு எதிராகக் கலகக்
தூக்க, வெளிப்படையாக
ர முதுகெலும்பு இல்லாமல்
கனர் எதிர் கோஷ்டியினர்.
ப அரசனை நம்பி புருசனை
ட துணியவில்லை கியானி
சிங்.

## 5 லட்சம்
## கோஷ்டியில் சேர்ந்துடு''

ங்கராசு, அதிமுக ஜானகி
டியைச் சேர்ந்தவர். திருச்சி
பலூர் தொகுதி நாடாளுமன்ற
ினர். சென்ற மாத இறுதி
ஜயலலிதா கோஷ்டியினரால்
ன டெல்லியிலிருந்து கடத்
டார். பிறகு, அவர் ஜெய
அணியில் தான் சேர்ந்து
தாக புகைப்படத்துடன்
கை வெளியிட்டார். இரண்
நாளில், தான் ஜானகி
பில்தான் இருப்பதாகவும்,
ன ஜெயலலிதா அணியினர்

கடத்தி சென்று மிரட்டி அறிக்கை வாங்கி வெளியிட்டதாகவும் கூறினார். ''தான் குடிப் பழக்கத்திற்கு அடிமையானவன்'' என்பதால், ஜெயலலிதா அணியினர் அதைப் பயன்படுத்தி, மதுவையும் பணத்தையும் காட்டி தன்னை விலைக்கு வாங்கிவிட முயற்சித்ததாக கூறினார். ஜெயலலிதா அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு டில்லிக்கு வந்து அடியாள் வைத்து, டில்லி—தமிழ்நாடு இல்லத்திற்கு தம்மை கடத்திச் சென்று , அங்கு வைத்து மிரட்டி விமானத்தில் கையோடு தம்மை சென்னை ஜெயலலிதா 'போயஸ் கார்டன்' வீட்டிற்கு அழைத்துச் சென்று,அங்கு வைத்து திரும்பவும் மிரட்டியதாகவும் 'திகில்' நிறைந்த கதை சொன்னார். இரண்டு வெள்ளைத் தாள்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, நூறு ரூபாய் கத்தைகள் அடங்கிய 5 லட்ச ரூபாய் 'சூட்கேசை' தம்மிடம் திணித்து தம்மை வெளியில் விட்டதாகவும் கூறினார்.

இதற்கிடையில், இ. காங்கிரசு தலைமை 'தங்கராசு கடத்தப்பட்டதாக சொல்வது புரளி என்றும் அரசியல் உள்நோக்கம் கொண்ட செய்தி' என்றும் விளக்கம் கொடுத்து ஜெயலலிதா கோஷ்டிக்கு வக்காலத்து வாங்கியது. தங்கராசு வெளியில் வந்து, கடத்தப்பட்டது பற்றி அறிக்கை வெளியிட்டு, பணப் பெட்டியை பாராளுமன்றத்தில் திறந்து காட்டி, 'தனக்கு பாதுகாப்பு வேண்டும், ஜெயலலிதா அணியினர் மீது இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கோரியவுடன் இ. காங்கிரசு, தமிழக சபாநாயகர் 'பலே' பாண்டியனின் தொழில் குருவான பாராளுமன்ற சபாநாயகர் பல்ராம் ஜாக்கரை அவிழ்த்துவிட்டு புகார் செய்த தங்கராசுவை மிரட்டிப் பணிய வைக்க பார்த்தது. ''அதைப்பற்றி இங்கு பேச அனுமதிக்க முடியாது. அப்படி பேசினாலும் சபை குறிப்பில் அது ஏறாது'' என்று எரிந்து விழுந்தார் சபாநாயகர் பல்ராம் ஜாக்கர். வழக்கமாக, எதிர்க்கட்சியினர் எது பேசினாலும் உடனே ''அதற்கு ஆதாரம் இருக்கிறதா? ஆதாரங்களை காட்டுங்கள், பரிசீலிக்கிறேன்'' என்று எதற்கெடுத்தாலும் ஆதாரங்களை காணநாயாய் அலையும் சபாநாயகர், பணப்பெட்டி ஆதாரத்தை மட்டும் கண்ணால் பார்க்கவும் மறுத்துவிட்டார். ''பெட்டியை மூடுங்கள், போலீசு நிலையத்தில் ஒப்படையுங்கள்'' என்று அடாவடித்தனம் செய்து, அப்பிரச்சனை சபையில் விவாதிக்கப்படுவதை தவிர்த்தார். ''ஏதாவது பேச வேண்டும் என்றால், புகார் கொடுக்கும் உறுப்பினர் தம்முடைய அலுவலக அறைக்கு வந்து பேசலாம்'' என்று கூறி, உறுப்பினர் ஏதோ தனது அந்தரங்க பிரச்சினைக்கு தீர்வு கேட்பது மாதிரி கொச்சைப் படுத்தினார்.

## ''ஊர சுற்றி பார்க்கலாம்
## 15 ரூபா வாங்கிக்கலாம்
## கறி சோறு திங்கலாம்
## கூட்டத்துக்கு வந்துடு''

'பிப்ரவரி 28ந் தேதி. வேலூரில் ஜெயலலிதா பொதுக்கூட்டம். கூட்டத்தில் கலந்து கொள்ள லாரியில் சென்ற கட்சித் தொண்டர்கள் விபத்தில் பலி; 13 பேர் சாவு, ஏராளமானோர் காயம்.

வேலூருக்கு செல்லும் வழியில் தண்டலம் அருகில் செட்டிப்பேடு என்ற இடத்தில் மாலை நேரத்தில் கவிழ்ந்த அந்த லாரியில் இறந்தவர்கள் அனைவரும் கூலி ஏழைகள். கவிழ்ந்த லாரியில், சாராய கேன்களும், சமைத்த கறிசோறும் சிதறிக் கிடந்து இருக்கிறது. உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தவர்களும், படுகாயம் அடைந்தவர்களும் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அதன் பிறகுதான் விசயமே அம்பலத்துக்கு வந்தது. லாரியில் இருந்தவர்கள் அனைவரும், சென்னை பூந்தமல்லி புறநகரைச் சுற்றி வசிப்பவர்கள். குன்றத்தூர், மாங்காடு என்று அடுத்தடுத்த ஊர்களில் வசித்த அவர்கள் அனைவரும் தினக் கூலிகள். பீடி சுற்றும் தொழிலாளி, பூ கட்டும் தொழிலாளி, கட்டிட வேலை செய்யும் தொழிலாளி இப்படி பல தரப்பட்ட தொழில் செய்யும் தொழிலாளிகள் அனைவரும் இளம் வயதினர். புதிதாக திருமணம் ஆனவர்கள், திருமணத்திற்கு நாள் குறித்து இருப்பவர்கள், வயதான தாயைக் காப்பாற்றிக் கொண்டிருந்தவர்கள்,

ஜெயலலிதா வீட்டில் திருநாவுக்கரசுடன் தங்கராஜ் எம்.பி.



படிப்பகம்

www.padippakam.com

தகப்பனை இழந்து குடும்ப பாரம் சுமந்து கொண்டிருப்பவர்கள். இப்படி தொடர்ந்து துன்பத்தில் உழன்றுக் கொண்டிருக்கும் இளம் மற்றும் நடுத்தர வயதினர். வேலை இல்லாமல் கூலி, வாய்க்கு ருசியான சோறு நீண்டதூர ஊர் பயணம் இவை எல்லாம் அவர்கள் ஏழ்மைக்கு எட்டாத சுகங்கள். எனவே புற்றீசல் மாதிரி கிளம்பி போயிருக்கிறார்கள்.

## ஓட்டு சீட்டு அரசியல் தலைவர்களுக்கு கொள்கை, லட்சியம் என்பதெல்லாம் ''வெங்காயம் வெள்ளைப் பூண்டு''

அறியாமையில் உழலும் அப்பாவி மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி கட்சிக் கூட்டங்களுக்கு வாரிக் கொண்டு செல்வது ஏதோ திராவிட கட்சிகளுக்கே உரித்தான தனி குணாம்சம் அல்ல. பன்னாட்டு பகாசுர விளம்பர நிறுவனங்கள் மூலம்கட்சிபிரச்சாரத்தை அதிநவீன முறையில் நடத்திக் கொண்டிருக்கும் இ.காங்கிரசு கட்சியும் கூட்டம் சேர்ப்பது இந்த முறையில்தான். இ.காங்கிரசு அரசாளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், ராஜீவ் காந்தியின் கடைக்கண் பார்வையை பெறுவதற்காக, அவரை அடிக்கொருதரம் தம் மாநிலங்களுக்கு அழைத்து அவரை மக்கள் வெள்ளத்தில் திக்குமுக்காட வைக்க வாடகைக்கு வந்து போகும் கூலி ஏழைகளையே நம்பியுள்ளனர். கட்சிக் கூட்டங்களுக்கும், பேரணிகளுக்கும் ஆயிரக்கணக்கில் ஆள் சப்ளை செய்வது அம்மாநிலங்களில் குண்டர்கள் தலைமையில் ஒரு தொழிலாகவே நடக்கிறது.

கூட்டங்களுக்கு அழைத்துவரப்படும் கூலி ஏழை தொழிலாளிகளுக்கு கொடுக்கப்படும் 'சன்மானங்களும் 'வெகுமதி'களும் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் உத்திரபிரதேசம் மாநிலத் தலைநகர், லக்னோவில் இ. காங்கிரசு சார்பில், ராஜீவ் காந்தி கலந்து கொண்ட விவசாயிகள் பேரணிக்கு வந்திருந்த கூலி ஏழை விவசாயிகளை பத்திரிக்கை நிருபர்கள் பேட்டிக் கண்டார்கள். ''எதற்காக லக்னோவுக்கு வந்தீர்கள்'' ''நான் லக்னோவை பார்க்க விரும்பினேன். அவர்கள், என்னை இலவசமாக கூட்டி வந்துவிட்டார்கள்'' ''நீங்கள் வருவதற்காக, அவர்கள் பணம் ஏதாவது தந்தார்களா'' ''எங்களை கூட்டி வந்தவர் நல்ல உள்ளம் படைத்தவர். தலைக்கு 20 ருபாய் கொடுத்தார்'', ''வேறு சிலருக்கு 18 ருபாய்தான் கொடுத்திருக்கிறார்கள்'' ''சோற்று பொட்டலம்கூட எங்களுக்கு இலவசமாக கிடைக்கிறது''. பேரணியில் கலந்து கொண்டவர்களில் பெரும்பான்மையோர் இவ்வாறு கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலி ஏழைகள்தான். வந்திருந்த கூட்டத்தின் எண்ணிக்கை சுமார் 5 லட்சத்தை எட்டியிருந்தது.

காங்கிரசு கட்சி செலவழித்த பணத்தை கொஞ்சம் கணக்குப் போட்டு பாருங்கள்; தலைசுற்றும்!

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலி ஏழைகளை திரட்டி வரும் வேலையைக்கூட காங்கிரசு கட்சி தன்னுடைய தொண்டர்களிடம் ஒப்படைப்பதில்லை. அனைத்தையும் அதிகார வர்க்கம்தான் செய்கிறது. இதற்காக, மூன்றடுக்கு முறை நடைமுறை செயல்படுத்தப்படுகிறது. கட்சி எம்எல்ஏக்களைக்கூட மாநிலத் தலைமை நம்புவது இல்லை. நீதித்துறையின் அதிகார வர்க்கம்தான் கட்சிக்கு ஆள் திரட்டும் விசுவாச ஊழியனாகவும், உள்ளூர் கட்சி தலைமையின் நடவடிக்கைகளை உளவறியும் சேவகனாகவும் ஊழியஞ் செய்கிறது. மாவட்ட, வட்டார, கிராம அளவில் அதிகார வர்க்கத்தை கட்சிக்காக இயக்கி, கட்சி ஊழியர்களின் அனைத்து மட்டங்களையும் பெயரளவுக்கு ஆனதாகவும், அதிகார வர்க்கத்தின் கீழ் செயல்படும் நிர்வாக அமைப்பாகவும் வைத்து கூலி ஊழியர்களையும் கொத்தடிமைகளாக்கி வைத்துள்ளது காங்கிரசு கட்சி.



மனைவி இந்திராணி ஜானகிக்கு மாலை அணிவிக்க, தங்கராஜ் எம்.பி.

ஆளுங்கட்சிகள், சா
விளம்பரம் எடுக்கவும் எதிர்
கள் பொழுதுபோக்கும் 'மா
எதிர்ப்புகளை காண்பி
இம்மாதிரியான கட்சிக் க
களும், பேரணிகளும் உ
விரத போராட்டங்களும்,
களும் நடத்த வேண்டியு
இவ்வளவுக்கும் உயிர்நாடி
பெருங்கும்பல் தேவைப்படு
கட்சியை நிலை நிறுத்திக்
வும், தலைமையை தக்க
கொள்ளவும் வாடகை
தவிர்க்க முடியாத தேவை
விட்டது.

'உன் முகத்தை காட்டு;
லட்சம் ஓட்டுகள் கிடை
என்று எம்ஜிஆரைப் ப
அண்ணாதுரையே கெஞ்
கிறார். அந்த அளவு எம்ஜி
மக்களிடம் செல்வாக்கு. அ
கூடும் கூட்டம் கூலிக்கு அம
பட்டது அல்ல, சுயமாக
என பிதற்றி திரிந்தவர்கள்,
போது தங்கள் வாயாலேயே
மையை கக்குகிறார்கள்.

''சேர்க்கப்படுகிற கூட்ட
பதில் இரண்டு வகை
'நான் எம்ஜிஆரைப் பார்க்க
டும், எம்ஜிஆர் பேச்சைக்
வேண்டும் என்று ஒருவன்
கிறான். அவன் இடத்திலே
வறுமையோ அல்லது
காரணங்களாலோ அவன் வ
யாத சூழ்நிலையில் இருக்
அவனுக்கு ஒரு வசதி
கொடுத்தால் அவன் வி
தோடு வருகிறான். வந்து
ஆரைப் பார்த்து, எம்ஜிஆ
பேச்சை கேட்டு விட்டு,
யோடு செல்கிறான். இது
வகை.

இன்னொரு வகையான
மும் சேர்க்கப்படுகிறது. பார்
காக, வேடிக்கை பார்ப்ப
வருகிற கூட்டம் அது. '
சென்னைக்குவாருங்கள். மது
வாருங்கள், நகரங்களுக்கு
கள், சுற்றிப் பாருங்கள்'
அழைத்துக் கொண்டு வ
ஏதோ ஒரு வேடிக்கை பா
கூட்டத்தைப் போல வரும் க
அது. அப்படி வருகிறவர்க
செலவு முதற்கொண்டு
பதும், 'ஒருநாள் நீங்கள் வே
இழந்து விட்டால் பத்து
வாங்கிக் கொண்டு வாரு
என்று சொல்வதும் நடக்கிற

கிராமத்தில் ஒரு நாள்
செய்தால், சம்பளம் கிடை
சூழ்நிலையில், நகரத்திற்குப்
லாம், வேடிக்கை பார்க்
பத்து ருபாய் வாங்கிக் கொண்
லாம்' என்று வருகிற கூட்
இருக்கிறது. இந்த இரண்டு
களுமே சேர்க்கப்படுகின்ற
தான். ஆனால் ஒரு கூட்டம்
வோடு, உணர்ச்சியோடு, அ
யோடு சேர்க்கப்படுகின்ற கூ

படிப்பகம்



உடையார், விஜய் மல்லய்யா, ஜி. வெங்கேஸ்வரன்

இன்னொரு கூட்டம், ஏதோ பணம் கிடைக்கிறது அல்லது வேடிக்கை பார்க்கிறோம் என்பதற்காக வருகிற கூட்டம். அப்படித்தான் இதைப் போன்ற திரைப்பட நடிகைகளையோ, அல்லது மற்றவர்களையோ பார்க்க வருகின்ற கூட்டம் வருகிறது. இந்த இரண்டாவது வகைக் கூட்டம்தான் இந்தஅம்மையாருக்கு வந்து சேருகிறது. அதில் ஓரளவுக்குக் கட்சிக்காரர்கள் இருக்கலாம்"

1 மார்ச் '88 துக்ளக்கில்
—ஆர்.எம் .வீரப்பன்

ஆக, அவர்களுடைய கூற்றுப்படி எம்ஜிஆருக்கு சேர்ந்த கூட்டமும் கூலிக்கு அமர்த்தப்பட்டது தான். வார்த்தைகளை பண்ணி பண்ணி சொல்லி விடுவதால் அவர்கள் அ.தி.மு.க.வின் அசல் தொண்டர்களாகிவிட மாட்டார்கள்.

கட்சி கூட்டத்திற்கு ஆட்களை சேர்ப்பதற்கே, லட்சங்களை கொட்ட வேண்டியிருக்கும்போது, அலங்கார வளைவுகளும், வண்ண விளக்குகளும் குவித்து தேர்தல் பிரச்சாரம் நடத்தவும், வாகன வசதிகள், தேர்தல்வேலைகள்; ஓட்டர்கள் லிஸ்டை வைத்துக் கொண்டு வீடு வீடாக புகுந்துவிருவது முதல் ஓட்டுபோட தள்ளாடும் கிழங்களை ஓட்டு சாவடிக்கு தூக்கி வருவது முதல் அமர்த்தப்படும் ஆட்களுக்கு கொடுக்கப்படும் லட்சங்கள் வரை குறைந்தது பத்து கோடி ரூபாய்களையாவது எட்டும். மறுபுறம், தலைவர்களின், கார், விமான, ஹெலிகாப்டர் போக்குவரத்துகள், ஐந்து நட்சத்திர ஓட்டல் செலவுகள், மக்களுக்கு அளிக்கப்படும் தேர்தல் நேர 'பரிசு'கள், விலைக்கு வாங்கப்படும் எதிரணி ஓட்டு சீட்டு அரசியல் தலைவர்கள், சாதியத் தலைவர்களுக்கு கொடுக்கப்படும் தொகைகள், எதிரணி ஓட்டுக்களை சிதறடிக்க பினாமியாக நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு செய்யும் செலவுகள், கடைசியில், தேர்தல், தோல்வி, வெற்றிக்கான, விளக்கம் மற்றும் வெற்றிவிழா கூட்டங்கள் என ஒதுக்கப்படும் தொகைகள் சில நூறு கோடி ரூபாய்களை எட்டும்.

குப்பையாக இறைக்கப்படும் இத்தனைக் கோடி ரூபாய்களும் கட்சி தொண்டன் தரும்அன்பளிப்பு அல்ல. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் 'காணிக்கை', உள்ளூர்தலைவர்களால், வியாபாரிகளிடம் பிடுங்கப்படும் கெடுபிடி வசூல், ஆளுங்கட்சியாகவோ, எதிர்க்கட்சியாகவோ, எந்த இடத்தில் அமர்ந்தாலும், முதலாளிகளுக்கும், பண்ணை பிரபுக்களுக்கும் ஆதரவாக குரல் கொடுப்பதற்காக அவர்களிடம் வாங்கும் முன் பணம். இவையெல்லாம் எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட வரவுகள். அவர், அவருக்கென சிறப்பாக இருக்கும் புரவலர்களிடம், இன்னொரு ஓட்டுசீட்டு அரசியல் கட்சி அதிகமாக கசக்கி பிழியாது. இது அவர்களுக்குள் வரும் மரபுரீதியான 'தொழில்' தர்மம். இடம் சரியில்லை. என புரவலரே இடம் மாறினால்தான் உண்டு.

இந்த வரிசையில்தான் ஜானகி அணிக்கு ஒரு சாராய உடையார், ஜெயலலிதா அணிக்கு, விஜய் மல்லய்யா, காங்கிரசு அணிக்கு, ஜி. வெங்கேஸ்வரன் என்ற ஜி.வி என்று ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள். இது இல்லாமல் இன்னும், ஏகப்பட்ட குட்டி புரவலர்கள் ஒவ்வொருவரிடமும் ஏராளமாக கைவசம் உண்டு.

இப்படிப்பட்டவர்களிடமிருந்து பெறும் நிதிவசூலில், எதிரணி ஓட்டுக்கட்சிகளும் எப்படி பெரிய மனதுடன் நடந்து கொள்கின்றன என்பதற்கு 10.3.88 குமுதத்தில் வந்த ஜானகி அணி வலம்புரிஜான், காங்கிரசு கட்சி மணிவர்மா இருவரின் உரையாடலிலும், குன்றின் மேலிட்ட ஒளிவிளக்கு போன்ற ஒரு எடுத்துக்காட்டு.

"மணிவர்மா: ஒரு விஷயத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒரு கட்டத்தில் சாராய·வியாபாரம் தமிழ்நாடு முழுவதும் ஒரே ஒருத்தர் தான் செய்து வந்தார். எம்ஜிஆருக்கு அவர் மிகவும் நெருக்கமாக இருந்தார். எம்ஜிஆரின் பாது காப்பிலேயே அவர் இருந்தார். அந்த வியாபாரத்திலிருந்து வந்த ஏராளமான பணம் எங்கே போயிற்று என்று யாருக்கும் தெரியாது. அது சந்தேகத்துக்குரியதாகவே இருந்து வந்திருக்கிறது. அந்தப் பணம் பூராவும் அரசாங்கத்திற்குத்தான் போயிற்று. எம்ஜிஆருக்குத்தான் போனது எம்ஜிஆரைக் கேட்டிருந்தால் கட்சிக்குத் தேவைப்பட்டது என்று சொல்லியிருக்கலாம். அதுவேறு சமாசாரம். ஆனால் எத்தனை கோடி ரூபாய் சாராய வருமானத்திலிருந்து வந்தது. அது எங்கே போயிற்று என்று நீங்கள்யோசனை செய்து பார்க்க வேண்டும். அந்தப் பணம்தான் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டில் கொஞ்ச நாட்களாக எதற்கெடுத்தாலும் ஏராளமாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. லஞ்சம் பலமான லஞ்சம். நான்கு மாடிக் கட்டிடங்களைக் கட்ட, இங்குள்ள எம்எம்டிஏ எத்தனை கட்டுப்பாடுகள்விதித்திருக்கின்றன! ஆனால் பணம் கொடுத்தால் பர்மிஷன் கொடுக்கிறார்கள். அந்த விஷயம் வெளியே வந்து விட்டது. கலைஞர் கருணாநிதியே'எம்ஜிஆர் இறந்த அன்றுகூடப் பணம் வாங்கியிருக்கிறார்கள்' என்று பேசியிருக்கிறார்.

ஜான்: திருநாவுக்கரசு என்கிற அமைச்சரே அப்படி வாங்கியிருப்பதாகக் குற்றச்சாட்டு.

மணிவர்மா: ஒருவர் மட்டுமல்ல. அமைச்சர்கள் எல்லாருமே!

ஜான்: வாதத்திற்காக அல்ல. சாராய வியாபாரத்திலிருந்து வந்த பணம் முதலமைச்சரிடம் (எம்.ஜி ஆர்.) போனதாகச் சொல்வது சரியல்ல. அவருக்கு அப்படிப்பட்ட அவசியமே நேரவில்லை.

மணிவர்மா: அவருக்கு அவசியமே நேரவில்லை. நான் ஒப்புக் கொள்கிறேன். அவருக்குப் பணமே தேவையில்லை."

—இருவருக்கும் எவ்வளவு பெரிய இதயம்! பலகோடி ரூபாய் லஞ்சத்தை எவ்வளவு சிறிய விசயமாக பார்க்கிறார்கள்.

இதோ, அதே திருடர்கள் மீண்டும் வருகிறார்கள், தேர்தல் வருகிறது, திருடர்களும் வருகிறார்கள். திருட்டு கும்பல் இப்போது சிறுசிறு கும்பலாகபிரிந்து வருகிறது புது சேர்க்கையுடன் வருகிறது. அணிமாறி வருகிறது. புது பொலிவுடன் வருகிறது. குரலை மாற்றி பேசுகிறது; குசலம் விசாரிக்கிறது.

உழைப்பாளி மக்களே! ஏமாந்து விடாதீர்கள் இதுதான் சந்தர்ப்பம், நழுவ விடாதீர்கள். கையும் களவுமாக பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்! விசாரணை துவங்குங்கள், அங்கேயே அப்போதே, உடனேயே தண்டனை வழங்குங்கள்!

● பச்சையப்பன்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கத்தரிக்காய் கணக்குகூட தெரியாத மதியழகனும் நெடுஞ்செழியனும் புள்ளிவிபர சதவிகிதக் கணக்குகளை அடுக்கிக் காட்டி, தமிழகத்தின் வரவு—செலவு திட்டத்தையே தயாரிக்கிறார்கள் என்றால்— நேற்றுவரை விமான ஓட்டியாக இருந்த இளவரசர் ராஜீவ், நாட்டின் பொருளாதாரத்தையே கரைத்துக் குடித்து கடந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார் என்றால்— கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால்— நம்புவதற்கு நாம் ஒன்றும் முட்டாள்களில்லை. இன்றைய கம்ப்யூட்டர் யுகத்தில் இதெல்லாம் அற்பவிஷயங்கள்; பொருளாதாரத்தைப் பற்றிய பெரிய அளவுக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் கால்குலேட்டர்களையும் கம்ப்யூட்டர்களையும் கொண்டு இவற்றை சுலபமாக சாதித்துவிட முடியும் என்று சிலர் நியாயப் படுத்தலாம். உண்மையில் நாட்டின் தலைவிதியைப் பளிச்சென படம் பிடித்துக் காட்டும் பட்ஜெட்டை சாமானிய நிதியமைச்சர்களோ மெத்தப்படித்தநிதியமைச்சர்களோ தயாரிப்பதில்லை. ஐந்தாண்டுத் திட்டங்கள், அரசின்கொள்கைகள், அன்னியக்கடன், பற்றாக்குறை, வருவாய்க்கான மூலாதாரங்கள், வரி விதிப்புகள் முதலானவற்றைக் கணக்கில் கொண்டு மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட் எப்படி, யாரால் தயாரிக்கப் படுகிறது?

●

மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப் படும் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆண்டின் ஜூலை—ஆகஸ்ட் மாதங்களிலேயே தயாரிப்புகள் தொடங்கிவிடுகிறது. நடப்பு நிதியாண்டில் வருவாய் எவ்வளவு உயரும், காத்திருக்கும் செலவுகள் எவ்வளவு என்பதை அரசாங்கம் முன்கூட்டியே கணக்கிடத் துவங்குகிறது. செலவுகளைப் பொறுத்தவரை திட்ட முதலீட்டுச் செலவுகள், திட்டமிடப்படாத செலவுகள் என இருவகைப்படும்.

முதல் இனத்தை திட்டக் கமிஷனும், இரண்டாவதை நிதியமைச்சகமும் மேற்பார்வையிடுகின்றன. செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் செலவுகளுக்கான வாய்ப்புகள், தேவைகள் பற்றிய பரிசீலனைகள் தொடங்குகின்றன. அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் சார்பு நிறுவனங்கள் திட்டக் கமிஷனிடம் தங்கள் கோரிக்கைகளையும் தேவைகளையும் முன்வைக்கின்றன. அதே நேரத்தில் வருவாய்க்கான சாத்தியக் கூறுகளும், வருமாண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் உயர்வும் கணக்கிடப்படுகிறது, குறிப்பாக, வங்கி முதலீடுகள், சேமிப்புகளே வருவாய்க்கான முக்கியமான மூலாதாரங்களாக கணக்கிடப்படுகிறது.

நவம்பரில், அரசாங்கம் அடுத்த நிதியாண்டில் எவ்வாறு வரவு—செலவுகளை அமைத்துக்கொள்வது என்பதைப் பற்றிய உத்தேசமான திட்டத்தை நிதியமைச்சகத்துக்குத் தரும். அதன்பிறகு நிதியமைச்சகம் சுறுசுறுப்படையத் தொடங்கியதும் சூடுபிடிக்க ஆரம்பித்துவிடும். வருவாய்த்துறை செயலாளர்கள் பிறதுறைகளிடம் வருவாய்க்கான சாத்தியக் கூறுகளை விசாரணை செய்வர்.

மறுபுறம் செலவுத்துறை செயலாளர் திட்டமிடப்படாத செலவுகளையும் புதிய தேவைகளையும் விசாரணை செய்வார். ஆரம்பத்தில் உத்தேசமாக மதிப்பீடு செய்யப்படும் செலவுகள் பின்னர் மந்திரிகளின் நிர்பந்தங்களினால் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகும். அடுத்த தேர்தலில் ஓட்டுப் பொறுக்கவும், கண்துடைப்பு நிவாரணத் திட்டங்கள் மூலம் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு மந்திரியும் தமது தொகுதிக்கான புதிய செலவுக்கான திட்டங்களைக் கொண்டு வந்து நிர்பந்திப்பர். நிதியமைச்சகம் வழக்கம்போலவே புதிய திட்டங்களுக்கு நிதியில்லை என்று கையை விரிக்கும். அதே சமயம் ஆளும் கும்பலின் கடைக்கண் பார்வைபெறும் திட்டங்களே பின்னர் ஏற்கப்படும்.

மந்திரிகள், அமைச்சகம் அடங்கிய உள்வட்டம் செலவுக்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்கும்போது வெளிவட்டமாக உள்ள எம்பிக்கள் சுறுசுறுப்படைவார்கள். தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவக் கும்பல்களின் சார்பாக சலுகைகள் மானியங்களைக் கோரி ஆலோசனைகளை அனுப்புவார்கள். இதுதவிர முதலாளிகள், நிலப்பிரபுக்கள், வர்த்தகர்கள் முதலான ஆளும் வர்க்கக் கும்பல்கள் தனிப்பட்ட முறையிலும் ஆலோசனைகளை அனுப்பி வைப்பார்கள். இம்முறை பட்ஜெட் தயாரிப்பின்போது கூட்டாக ஆயிரம் பரிந்துரைகளும், தனிநபர்கள் மூலம் மூவாயிரம்பரிந்துரைகளும் வந்தனவாம்.

இத்தனை ஆலோசனைகள் பரிந்துரைகள் அனைத்தையும்— ஏறத்தாழ 90 சதவீத அளவுக்கு நிதி அமைச்சகம் முன் கூட்டியே பரிசீலிக்கும். பரிசீலிக்கிறார்களோ

இல்லையோ, ஆளும் வ
விசுவாச நிதிமந்திரி 'நாங்
அனைத்தையும் கவனமாகப்
சீலிக்கிறோம். சில பரிந்துரை
நிச்சயம் ஏற்கக் கூடியவை' என்
வழக்கமான பல்லவியைப் ப
வார். உண்மையில் இவற்
ஏறத்தாழ நூறு பரிந்துரை
ஆலோசனைகள் மட்டுமே தே
செய்யப்பட்டு அவற்றை செ
படுத்தினால் ஏற்படும் விளை
களைப் பற்றி கம்ப்யூட்டர் மூ
பரிசீலிப்பார்கள்.

பட்ஜெட் தயாரிப்பில் ஜன
மாதம் முக்கிய மைல் கல்லா
கருதப்படுகிறது. ஏனெனில் ப
துரைகளைப் பரிசீலிப்பது ம
மின்றி, பற்றாக்குறை வி
தொகை, வங்கி மூலாதாரங்
சேமிப்பு விகிதம் முதலானவை
துல்லியமாக கணக்கெடுக்கப்ப
அடுத்து வரும் இரு வாரங்கள்
நிலைமைக்கேற்ப அவ்வப்போ
திருத்தியமைக்கப்படுகிறது.

ஜனவரியில், பற்றாக்கு
யாக விழும் தொகை எவ்வள
வரிகள் போடுவதன் மூ
கிடைக்கும் தொகை எவ்வள
எந்தெந்த துறைகளில் சலுகை
மானியங்கள் வழங்கலாம் என்ப
நிதி அமைச்சகத்துடன் கல
லோசித்து நிதியமைச்சர் தீர்மா
பார். நிதியமைச்சரின் சுய வி
பத்தின்படி அவற்றை தீர்மானி
லாம் என்றாலும் பிரதமர் அ
அங்கீகரிக்க வேண்டும். என
தனது ஆலோசனைகளு
அதை பிரதமருக்கு அனுப்பி வை
பார்.

நிதியமைச்சர் தனது விருப்
திற்கு எதையும் செய்துவிட
யாது. அவர் பொருளாதா
புலிகளையும் திட்டக் கமி
உறுப்பினர்களையும் கூட்டி கரு
கேட்டு முடிவு செய்ய வேண்
இதுதவிர முதலாளிகள், நி
பிரபுக்கள், வர்த்தகர்கள், பத்தி
கையாளர்கள் முதலானோரி
பட்ஜெட் எப்படி அமைய வேண
மென விரும்புகிறார்கள் எ
கலந்தாலோசிப்பார். அவச
தேவைக்கு பிரதமரைக் கல
லோசிப்பார்.

அதன்பிறகு வருவாய்துறை
செலவுத்துறை செயலாளர்க
தலைமை பொருளாதார ஆலோ
கர், பட்ஜெட்டுக்கான கூடு
செயலாளர்களைக்கொண்ட த
'அடுப்பங்கரை'அமைச்சரவை
கூட்டி வாரக் கணக்கில் விவா

# பட்ஜெட் இரகசிய



படிப்பகம்

www.padippakam.com

ர். இந்தக் கூட்டங்களில் பிரத ின் அலுவலகப் பிரதிநிதியும் ந்து கொள்வார். உறங்கிக் ாண்டிருக்கும் அதிகார வர்க்கக் ட்டம் அப்போதுதான் செயல் ஆரம்பிக்கும். வருவாய்த்துறை யலாளர்கள் கண்ணில் விளக் ண்ணெய் ஊற்றிக் கொண்டு வு பகலாக புள்ளி விபர வரை க் கோடுகளை காகிதங்களில் க்குவர்.

இப்போது திட்ட முதலீட்டுச் லவுகள் மற்றும் திட்டமிடப் ாத செலவுகள் என்ற இரு ராடைகளும் சங்கமித்து முழு ருவம் பெறும். இதற்கிடையே ர்வ் வங்கியின் கவர்னர் வங்கி லிட்டின் வளர்ச்சி, பணப் க்கத்தின் நிலைமை ஆகியன றிய அறிக்கைகளை அனுப்பு ர். இறுதியாக எந்தெந்த துறை ரில் எவ்வளவு வரி விதிப்பது ற கேள்விக்குறியோடு அரை ர்த்தியாக்கப்பட்ட பட்ஜெட் ாராகிவிடும்.

புதியவரி விதிப்புப் பணியை தியமைச்சகத்தின் இரு கரங் ான மத்திய நேர்முக வரிக் ழமமும், மத்திய எக்சைஸ்— வாய் குழுமமும் நிறைவேற்றும். ாரணமாக, மத்திய நேர்முக க் குழுமம் தான் முன்வைக்கும் ிய வரிவிதிப்புகளைப் பற்றி ப்யூட்டர்கள் மூலம் என்ன ளைவுகளை ஏற்படுத்தும் என்று ண்டறியும்.

பிப்ரவரி பத்தாந் தேதிக்குள் ட்டல்—ஒட்டல்களுக்குப் பிறகு ் மொழியப்படும் வரிகள் இறுதி வம் பெறப்படும். அதன்பிறகு வார காலத்திற்கு வரைவிய ளர்கள் முழுமைப் படுத்தும் பணி ச் செய்வர். இதற்கிடையில் லவு பற்றிய பட்ஜெட் ஆவணங் அரசு அச்சகத்துக்கு அனுப்பி வக்கப்பட்டு அதன் விபரங்கள் வெளியே சென்று விடாதபடி பலத்த பாதுகாப்புடன் அச்சிடப் படும்.


இனி நிதியமைச்சரின்பட்ஜெட் உரையைத் தயாரிக்க வேண்டியது தான் பாக்கி. தலைமை பொருளா தார ஆலோசகர் மற்றும் நிதித் துறைச் செயலாளர்களைக் கொண்ட கமிட்டி பெருமுயற்சி செய்து இதைத் தயாரிக்கும். சாதாரணமாக, இது பலமுறைதிருத் தம் செய்யப்பட்டு இறுதி வடிவம் பெறும்.

அதன்பிறகு ராஜீவ் காந்தி தனது கால்குலேட்டரையும் கம்ப்யூட்டரையும் வைத்துக் கொண்டு இறுதி திருத்தங்களைச் செய்து செப்பனிடுவார். ஒவ்வொரு முறையும் வரிச்சுமை ஏற்றப்படும் போதெல்லாம் அவற்றை ஜன ரஞ்சகமான சொல்லடுக்குகளைக் கொண்டு மூடிமறைப்பது நேரு குடும்பத்தின் பரம்பரை வழக்கம். அதன் மரபை மீறாமல் ராஜீவ் தன் பங்குக்கு ஜிகினா வேலை ளைச் செய்வார், பின்னர் நிதி யமைச்சர் தன்பங்குக்கு சில பழ மொழிகளையும் பொன்மொழி களையும் சேர்த்து தனது பட்ஜெட் உரையை பிரமாதமாக்க படாத பாடுபடுவார்.

பின்னர் இந்த உரை தனி ஆவணமாக அரசு அச்சகத்துக்கு அனுப்பப்பட்டு அச்சிடப்படும். இறுதியில் அவை பட்ஜெட் தினத்தன்று வெளியிடப்படும். அதுவரையில் அதிகாரிகளும் அச்சக ஊழியர்களும் அரசு அச்சகத்திலிருந்து வெளியேற முடியாதபடி காவலில் வைக்கப் படுவர். உணவுக்கும் தங்குவதற்கும் அச்சகத்திலேயே ஏற்பாடு செய்யப் படும். நிதியமைச்சர்பாராளுமன்றத் தில் பட்ஜெட் உரையை நிகழ்த்திய பின்னரே அவர்கள் 'விடுதலை' செய்யப்படுவர்.

பட்ஜெட் பற்றிய விபரங்கள் எதுவும் முன்கூட்டியே கசிந்து விடாதிருக்க நிதியமைச்சக அதி காரிகளிலிருந்து அவர் வீட்டுப் பியூன் வரை உளவுத் துறையின ரால் ரகசியமாக கண்காணிக்கப் படுவர். அதிகாரிகள் வீட்டு டெலி போன் பேச்சுக்கள்கூட உளவுத் துறையால் ஒற்றறியப்படும். என்ன தான் ரகசியம், பாதுகாப்பு என்றா லும்கூட பட்ஜெட் விபரங்கள் 'எப்படியோ' வெளியே வந்து, பெருவியாபாரிகள் பீடி— சிகரெட்டி லிருந்து அத்தியாவசியப் பொருட் கள் அனைத்தையும் பதுக்கி கொள்ளை லாபமடிப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

இப்படி அதிகார வர்க்கத்தால் மிகவும் ரகசியமாகவும் பாதுகாப் பாகவும் தயாரிக்கப்படும் பட்ஜெட் சாராம்சத்தில் ஆளும் வர்க்கங் களுக்கு சலுகைகளையும் மானியங் களையும் வாரி வழங்குவதோடு பரந்துபட்ட மக்கள்மீது வரிச் சுமையை ஏற்று வதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த




நாற்பது ஆண்டு 'சுதந்திர' வரலாற்றில பற்றாக்குறையும் அதை ஈடுகட்ட வரிச்சுமையும் விதிக்காத பட்ஜெட்டே இல்லை.

நாற்பதாண்டுகளாக நிதி மந்திரிகள் பட்ஜெட் உரையின் போது வழக்கமாக ஒரே பல்லவியைப் பாடுகின்றனர். 1948ல் நிதி மந்திரியாய் இருந்த ஆர்.கே. சண்முகம் செட்டி,



படிப்பகம்

www.padippakam.com




"உணவு நிலைமை தொடர்ந்து மோசமாக உள்ளது... கூடுதல் விநியோகத்திற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று தன் பட்ஜெட் உரையில் குறிப்பிட்டார்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தனது பட்ஜெட் உரையில், "சில மாநிலங்களில் உணவு நிலைமை மோசமாக உள்ளதாக தகவல்கள் வந்துள்ளது. நிலைமை தீவிரமடைவதைத் தடுக்க முயற்சிக்க விழைகிறேன்" என்ற அதே பல்லவியைப் பாடினார்.

மீண்டும் ஒரு தலைமுறைக்குப் பிறகு 1967ல் மொரார்ஜி தேசாய் அதே சோககீதத்தை தனது பட்ஜெட் உரையில் இசைத்தார். "பருவமழை பொய்த்ததால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அவசியமான அளவு இறக்குமதி செய்வது தேவையாகவுள்ளது' என்றார்.

பதிமூன்று ஆண்டுகளுக்குப் பின்னால் வெங்கட்ராமன் நிதி அமைச்சராக இருந்தபோது, "விவசாய உற்பத்திஆறு சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டார். இன்று 1988ம் ஆண்டின் பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது என் டி திவாரியும் இதே பல்லவியைத் திரும்பவும் பாடுகிறார்.

உணவுப் பற்றாக்குறை மட்டுமல்ல. 1948லிருந்து தொடர்ச்சியாக விலையேற்றம் இல்லாத பட்ஜெட்டே இல்லை. 1947ல் சண்முகம் செட்டி அனைத்து துறைகளிலும் விலையேறியிருப்பதை சுட்டிக்காட்டி பட்ஜெட் உரையின்போது பேசினார். 1957ல் டி டி கே அரிசி 14.1 சதவீதமும் கோதுமை 16.4 சதவீதமும் ஆலை கச்சாப் பொருட்கள் ஒன்பது சதவீதமும் உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார். 1974ல் ஒய்.பி. சவாண் நிதிமந்திரியாக இருந்தபோது 'விலையேற்றம் ஆழ்ந்த கவலை தருகிறது. பணவீக்கத்தை ஒழிப்பது நாட்டின் முதல் முக்கிய பிரச்சினையாக உள்ளது' என்று அங்கலாய்த்தார். 1980ல் 'விலையேற்றம் மேலும் 20 சதவீதம் உயர்ந்துள்ளதாக நிதி மந்திரி குறிப்பிட்டார். இப்போது 1988ல் பட்ஜெட்டுக்கு முன்னரே வஞ்சகமாக விலையேற்றம் செய்துவிட்டதால் புள்ளி விபர சதவிகித கணக்கு காட்டி வெறுமனே 0.5சதவீதமே விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாக நாடகமாடுகிறது ராஜீவ் அரசு.

உணவுப் பற்றாக்குறை, விலையேற்றம் என்ற பொருளாதாரப் புற்று நோய்களோடு கூடவே பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து அதை ஈடுகட்ட மக்கள்மீது தொடர்ந்து வரிச்சுமை ஏற்றுவதும் ஆளும் வர்க்க நிதியமைச்சர்களின் வழக்கமான விதியாகிவிட்டது. 1948ல் சண்முகம் செட்டி 1 09 கோடி ரூபாய் பற்றாக்குறையாக காட்டினார். 1957ல் டி.டி.கே பற்றாக்குறையை 365 கோடியாக உயர்த்தி வரிவிதிப்பைக் கடுமையாக்கினார். 70களில் பட்ஜெட் பற்றாக்குறை நூறு கோடிகளிலி-

ருந்து ஆயிரம் கோடிகளாக உய
தது. பின்னர் அது நிரந்தர
யாகிப் போனது. எச்.எம். படே
பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது 1
கோடியாக இருந்து கடைசி
1590 கோடியாக பற்றாக்குறை
கரித்தது.

அதன் பிறகு பற்றாக்கு
பட்ஜெட் தயாரிப்பது ஒன்றும்
றானதல்ல என்று பொருளா
நிபுணர்கள் நியாயப்படுத்தத் து
கினர். 1985ல் வி.பி. சிங் பட்ஜெ
சமர்ப்பித்தபோது பற்றாக்கு
யாக ரூ 3,660 கோடியாக கா
னார். பின்னர் அது 4490 கே
யாக அதிகரித்தது. கடந்த ஆ
பாசிச இளவரசர் ராஜீவ் தா
தயாரித்த பட்ஜெட்டில் ரூ. 5
கோடியை பற்றாக்குறையாக
டினார். பின்னர் அது ரூ 8,
கோடியாக உயர்ந்தது. வற
நிவாரணப் பணிகளுக்காக தி
மிட்டதைவிட அதிகமாக செல
டதால் பற்றாக்குறை அதிகரி
விட்டதாக ராஜீவ் கும்பல்
போது பசப்புகிறது.

இந்தியா 'சுதந்திர'மடை
பிறகு ஆரம்ப கால நிதி மந்திரி
பற்றாக்குறை பட்ஜெட் தய
பதைப் 'பாவச் செயலாக'க் க
குறைந்தபட்சம் தமது பட்ெ
உரையிலாவது வருத்தம் தெரி
பார்கள். இப்போது அதெல்
அநாகரிகச் செயலாகிவிட்டது.
களிடமிருந்து அன்னியப்பட்
போய் விட்டதாலோ என்னவோ
நிதிமந்திரிகள் தமது பொரு
ளர்வை தட்டிக் கழிப்பதையே
பாக்கிவிட்டனர்.

பற்றாக்குறை என்ற நிலை
ருந்து அந்நியச் செலாவணி
யிருப்பு இல்லாமல்அன்னிய இற
மதி அதிகரிப்பதும், பணவீ
யானைக்காலாகப் பெருத்
போவதும் இந்தியப் பொருளாத
தின் தவிர்க்கவியலாத தலை
யாக ஆட்சியாளர்கள் சீரழிந்த
பற்றாக்குறையை ஈடுகட்ட
வரிவிதிப்பது என்ற நடைமு
யால் மக்களின் அதிருப்திக்
வெறுப்புக்கும் உள்ளாக வே
யிருக்கிறது என்பதால் 1980 மு
ஆட்சியாளர்கள் வஞ்சகமாக
உத்தி ஒன்றைக் கையாளுகி
னர். அதாவது பட்ஜெட்டு
முன்னும் பின்னும் அத்தியாவ
பொருட்களை விலையே
செய்து 'ஜனரஞ்சக', 'மென்
யான' அனைத்து தரப்பினரும்
வேற்கும் பட்ஜெட் தயாரிப்
என்ற மோசடியே இன்று ஆ
யாளர்களின் நடைமுறையாக
ளது. அதன்படியே இப்போது
ஜெட்டுக்கு முன்னரே விலை
றம் செய்துவிட்டு 'மென்மையா
பட்ஜெட் தயாரித்துள்ள
பாசிச கும்பல் பீற்றிக் கொள்கி

● மனோக

படிப்பகம்




# “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்”

(சென்ற இதழின் தொடர்ச்சி`

“இந்த நாட்டில் பிரிட்டிஷ் ட்சியை நீடித்து நிறுத்துவதற் க, அதை ஒழிக்கப் பாடுபட்ட ல இயக்கங்களையும் எதிர்க்கும் ரியைத்தான் நீதிக்கட்சி இருந்த ரை செய்து வந்தது”—என்று சரி கவே குற்றஞ்சாட்டிய ராம த்தி இதை நிரூபிப்பதற்காக பிடுதலைப் போரும் திராவிட பக்கமும்” என்ற தமது நூலில் உதாரணங்களைக் கொடுத்துள் ர்.

நீதிக்கட்சியின் தேச துரோகச் யல்களைத் தொகுத்துத் தரும் மூர்த்தி, இவற்றுக்குச் சற்றும் றையாத, இவற்றையும் விஞ்சி ட்ட காந்திய—காங்கிரசு துரோ களை மூடி மறைக்கிறார்; அல் வரலாற்று உண்மைகளைப் ட்டிச் சொல்கிறார். சில சான்று ளை இங்கே பார்ப்போம்:

●

—கொடிய அடக்குமுறைச் டமான ரௌலத் சட்டத்தை ங்கிரசின் மிதவாதிகள் உட்பட லா அரசியல் கட்சிகளும் எதிர்த் ா. “இந்த அநியாயச் சட் த்தை அன்று ஆதரித்த ஒரே ரசியல் கட்சி ஜஸ்டிஸ் கட்சி ரகும்.”

—“ஜாலியன் வாலாபாக்” படு காலையைக் கண்டிக்காத அரசி ல்வாதிகளே அன்று இந்தியாவில் ரும் இல்லை. ஆனால் அந்த ட்சசத்தனமான நரவேட்டைக் காலைக் காண்டத்தை ஜஸ்டிஸ் ட்சியின் சார்பாக சர். பி. தியாக ய செட்டியாரும், டாக்டர் டி.எம். யரும் ஆதரித்து அறிக்கை விட்ட ர். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ார்ச்சியை முளையிலேயே கிள்ளி றிவதற்காக எத்தனை இந்திய க்களின் ரத்தத்தையும் கண்டு ங்கள் களிப்போம் என்று ஜஸ் ஸ் கட்சித் தலைவர்கள் இந்த றிக்கையின் மூலம் பறைசாற்றி ர்.

_அதாவது ரௌலத் சட்டத்தையும் ஜாலியன் "வாலாபாக் படுகொலையையும் நீதிக்கட்சி ஆதரித்தது, ஆனால் காங்கிரசு எதிர்த்தது என்கிறார் ராமமூர்த்தி. ரௌலத் சட்டத்தை எதிர்த்துப் போராடிய மக்களை காலனிய அரசு மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றபோது, பஞ்சாப் மக்கள் திருப்பித் தாக்கினர். “மகா ஜனங்கள் பாஞ்சால நாட்டில் கோபாவேசத்தில் செய்யப் புகுந்த அதிக்கிரமங்களைக் கண்டிக்க காங்கிரசு மகாசபை இணங்காவிடில் நான் மகாசபையை விட்டு வெளியேறி விடுவேன்” என்று காந்தி மிரட்டினார். “கோபமூட்டப்பட்ட பாஞ்சால ஜனங்கள் செய்த அதிக்கிரமங்களுக்காக, மகாசபை மிகுந்த வருத்தமுறுவதாக” தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. “இந்த மகாசபை முன் கொணரப்பட்ட தீர்மானங்களைத்திலும் இதுவே தலைசிறந்தது” என்று காந்தி மகிழ்ந்து போனார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலையை விசாரிக்க காந்திதலைமையில் அமைக்கப்பட்ட காங்கிரசு கமிட்டி “படுகொலைக்குக் காரணமானவர்களை மேதகு பிரிட்டிஷ் அரசின்கீழ் பணியாற்றுவது அரசுக்கு கெட்டபெயர் உண்டுபண்ணிவிடும். ஆனாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டியதில்லை; திரும்பப் பெற்றாலோ இடமாற்றம் செய்தாலோ போதும்” என்று கோரியது. அதே சமயம் பஞ்சாப் மக்கள் வன்முறையில் ஈடுபட்டதைக் கண்டித்தது.

இது மட்டுமின்றி காந்தியார் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு பின்வருமாறு அறிக்கை வெளியிட்டார், “நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். மேலும் சர்க்கார் பாஞ்சால விசாரணைக்காக ஒரு கமிஷன் நியமனமாகிக்கொண்டிருக்கிறது என அறிவிக்கிறார்கள். சர்க்கார் இவ்வளவு நல்ல மனப்பான்மையுடன் இருக்கும்போது நான் அவர்கள் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் இறங்குவது தவறு சாத்வீகபோரில் ஈடுபட்டவன் சர்க்காரை சங்கடத்துக்கு உள்ளாக்க மாட்டான்.”

**ராமமூர்த்தியின் நூலிலேயே காந்திய–காங்கிரசு தேசத்துரோகங்களுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. இவை தவிர கணக்கிலடங்காத பல துரோகங்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும். ஆனாலும் காந்திய காங்கிரசு இயக்கத்தை விடுதலைப் போராகச் சித்தரிக்கிறார் ராமமூர்த்தி. அதன் மூலம் தான் ஒரு கம்யூனிசப் போர்வையிலிருந்த காந்திய—காங்கிரசு — பார்ப்பனீய வாதி என்பதை மறைமுகமாகக் காட்டிக் கொள்கிறார்.**

●

—“மாண்டேகு—சேம்ஸ்போர்டு” சீர்திருத்தம் என்ற 1919—ம் ஆண்டைய அரசியல் சட்டத்தை நாடெங்கிலும் தேசிய இயக்கம் பலமாக எதிர்த்தபோது ஜஸ்டிஸ் கட்சி அதை வரவேற்றது. பிரிட்டிஷ் சர்க்காரோடு ஒத்துழைப்பதாக வாக்குறுதி அளித்தது. அதன் அடிப்படையிலான தேர்தலைத் தேசிய இயக்கம் புறக்கணித்தபோது நீதிக்கட்சி பங்கேற்று, பதவி அடைந்தது என்று கூறுகிறார் ராமமூர்த்தி. “மாண்டேகு சேம்ஸ் போர்டு” சீர்திருத்தத்தை காங்கிரசின் “மிதவாதப்” பிரிவு, குறிப்பாக மைலாப்பூர் பார்ப்பன கும்பல் வரவேற்றுத் தேர்தலில் பங்கேற்றது; இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இதே சீர்திருத்தத்தின் கீழ் வந்த இரட்டை ஆட்சியில் பங்கேற்பதற்காக காங்கிரசின் ஒரு பிரிவான சுயராஜ்யக் கட்சியை மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ், எஸ். சீனிவாச ஐயங்கார் ஆகியோர் துவக்கினர்.

●

—பிரிட்டிஷ் அரச குடும்பத்தினராகிய கானாட்டு கோமகனும், வேல்ஸ் இளவரசரும் இந்தியா வந்தபோது அவர்கள் போகும் ஊர்களில் எல்லாம் அர்த்தால்களைக் கடைப்பிடித்து அவர்களைப் புறக்கணிக்கக் கூறினார் காந்தி. நாடே அர்த்தால் நடத்திப் புறக்கணித்தது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் மாநகராட்சி நகர சுத்தித் தொழிலாளர்கள் வசிக்கும் குப்பங்களுக்கு அதிகாரிகளை அனுப்பி அவர்களுக்குக் காசு கொடுத்து, எப்படியோ 1000 பேரைக் கூட்டி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

பிரிட்டிஷ் அரச குடும்பத்தினருக்கு வரவேற்புக் கொடுத்தனர்என்கிறார் ராமமூர்த்தி. இதுவும் பாதி உண்மை தான். வேல்ஸ் இளவரசருக்கு நல் வரவு கூறி ஆசிரியப்பா பாடியிருக் கிறார் "தேசியக்கவி"யென்று போலிக் கம்யூனிஸ்டுகள் போற் றும் பாரதியார். 1911ல் பிரிட்டிஷ் பேரரசரை வரவேற்று எழுதிய தாகூரின் பாடல்தான் வெட்கமின்றி இப்போதும் இந்திய தேசியகீதமாக உள்ளது. இப்போது காங்கிரசார் இதைமறுத்தாலும், 1911ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் இந்தியா வந்த போது 26வது கல்கத்தா காங்கிர சில் வரவேற்புத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதோடு ஒரு வாழ்த் துப் பாடல் பாடப்பட்டதாக காங் கிரசு ஆவணங்களில் உள்ளது.

●

—நாடெங்கிலும் உள்ள தேச பக்தர்கள் சைமன் கமிஷனை புறக் கணித்து, தடியடிகளைத் தாங்கி கமிஷனோடு ஒத்துழைக்க மறுத்த போது சென்னையிலிருந்தஜஸ்டிஸ் இந்தக் கமிஷனை வரவேற்று விருந்தளித்தது. என்கிறார் ராமமூர்த்தி. ஆனால் அம்பேத்கார் உட்பட வேறு சில தலைவர்களும் சைமன் கமிஷனை வரவேற்று பங் கேற்றனர். 1935 அரசியல் சட்டத் தை காங்கிரசும், முஸ்லீம் லீகும் நிராகரித்தபோது நீதிக்கட்சி வர வேற்றதோடு அதன் அடிப்படையி லான தேர்தலில் பங்கேற்று, படு தோல்வியடைந்தும்கூட நீதிக்கட்சி இடைக்கால மந்திரிசபை அமைத் தது என்கிறார் ராமமூர்த்தி.

—1935இல் ஒரு புதிய அரசியல் சட்டத்தை பிரிட்டிஷ் சர்க்கார் கொண்டு வந்தபோது காங்கிரசு, முஸ்லீம் லீக் இரண்டுமே நிராகரித் தது. ஆனால் சென்னை ராஜ தானியில், மந்திரி சபையில் வீற்றி ருந்த ஜஸ்டிஸ் கட்சி நிராகரிக்க வில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பிரிட்டிஷ் சர்க்காரோடு ஒத்துழைப்பதாகஅறி வித்தது. மாநில தேர்தல்களில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்விஅடைந் தது. வெற்றி பெற்ற காங்கிரசு அதன் ஆட்சி நிர்வாகவேலைகளில் கவர்னர் குறுக்கிடுவதில்லை என் கிற உறுதிமொழி கோரி மந்திரிசபை அமைக்க மறுத்துவிட்டது. இந்த சங்கட நிலையில் மக்களால் தூக்கி எறியப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியின் பிரமுகர்கள்தாம் பிரிட்டிஷ் சர்க்கா ருக்குக் கைகொடுக்க முன்வந்த னர்; அவர்களைக் கொண்டு ஒரு இடைக்கால மந்திரிசபை அமைக் கப்பட்டது. என்கிறார் ராமமூர்த்தி.

1935 அரசியல் சட்டத்தை நிராகரிப்பதாகச் சொல்லிக்கொண் டே அதே சமயம் அதன் அடிப் படையிலான தேர்தலில் காங்கிரசும் முஸ்லீம் லீகும் முழுமூச்சாக பங் கேற்றன. தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரசு மந்திரிசபைகளை அமைப் பதற்கு ஒரு நிபந்தனை போட்டது. "காங்கிரசு, கட்சித் தலைவர்களு டைய தினசரி நிர்வாக வேலை களில் கவர்னர்கள் குறுக்கிடுவ தில்லை என்றும் அரசியல் சட்டப் படி அவர்கள் கொடுக்கும் யோச னைகளை நிராகரிக்க மாட்டார்கள் என்றும் உறுதிமொழி அளிக்க வேண்டும். அவர்களிடம் தனியாக உறுதிமொழி அளித்தால் மட்டும் போதாது; காங்கிரசு கட்சித் தலை வர் அப்படிப்பட்ட உறுதிமொழி கிடைத்தது என்று பகிரங்கமாக அறிவிக்கும் நிலையில் இருக்க வேண்டும் என்பதே அந்த நிபந் தனை." —மேற்படி நூல் 118. இந்த உறுதிமொழி அளிக்க கவர் னர் மறுத்துவிட்டார். பெரும்பான் மை இருந்தும் காங்கிரசு மந்திரி சபை அமைக்கவில்லை. காத்துக் கிடந்த நீதிக்கட்சி ஓடிப்போய் இடைக்கால மந்திரிபைஅமைத்தது.

ஆனால் சிறுபான்மை அரசு நீடிக்க முடியாத முட்டுக்கட்டை ஏற்படவே வைஸ்ராய் ஒரு அறிக் கை விட்டார். "மந்திரிகளுடன் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந் தவர்களாயினும் மோதல்களைத் தவிர்க்கவே எல்லா கவர்னர்களும் அக்கறை கொண்டுள்ளனர். அது மட்டுமல்ல, ஏதாவது மோதல்கள் ஏற்பட்டாலும் அதைச் சமரசமாக தீர்ப்பதற்கு சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்று விரும்பு கின்றனர்" என்ற பொருள் அறிக் கையில் அடங்கியிருந்தது. காங் கிரசு விடுத்த நிபந்தனையையும் வைஸ்ராய் அளித்த உறுதிமொழி யையும் ஒப்பிட்டுப் பாருங்கள். எலும்புத் துண்டுக்குக் காத்துக் கிடந்த நாய்களைப் போல மந்திரி பதவியைப் போய் கவ்விக் கொண் டார்கள் என்பதே உண்மை!

●

—இரண்டாம் உலகப் போரின் போது யுத்தத்தில் பங்கேற்பதற்கு முன்நிபந்தனையாக ஒரு இடைக் கால தேசிய சர்க்கார் அமைக் கும்படி காங்கிரசும் முஸ்லீம் லீகும் கோரியது. அதை மறுத்து இந்தியர்களையும் கொண்டதாக வைஸ்ராயின் நிர்வாகக்கவுன்சிலை விரிவுபடுத்த பிரிட்டிஷ் சர்க்கார்



முன் வந்தது. காங்கிரசும் முஸ் லீகும் பிரிட்டிஷ் சர்க்காரின் திட் களை நிராகரித்து வைஸ்ரா நிர்வாகக் கவுன்சிலில் சேர மறு போது மக்களால் புறக்கணிக் பட்ட ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர ஆற்காட்டு ராமசாமி முதலி அந்த நிர்வாகக் கவுன்சிலில் விரைந்தோடினார். என்கி ராமமூர்த்தி. ஆற்காடு ர சாமி முதலியார் மட்டுமல்ல, பேத்கார் பங்கேற்றார். அத முன்பாக மைலாப்பூர் பார்ப் கும்பலின் பெருந்தலைவர் சி ராமசாமி ஐயர் பங்கேற்றார்.

—நிலப்பிரபுக்களையும், லே தேவிக்காரர்களையும் எதிர் "மாப்ளா கலகம்" என்றழைக் பட்ட விவசாயிகளின் ஆயுதந் கிய போராட்டம் மலபாரில் வெ தது. பிரிட்டிஷ் ராணுவத் கொண்டு அதை அடக்கிய ஆயிரக்கணக்கான மாப்பிள் மார்கள், தனிக் கோர்ட்டுகள் மூ ஆயுள் தண்டனை விதிக்கப்ப னர். அவர்களில் 800 பே சரக்கு ரயில் பெட்டியில் அடை சென்னைக்கு அனுப்பினார்கள். மணி நேரம் சுவாசிக்கக் காற்றி குடிக்க நீரின்றி சென்னை வ ரயில் பெட்டியைத் திறந்தபே பெரும்பாலோர் செத்துக் கிட னர். அந்தக் கோரச் சம்ப நடந்தபோது ஜஸ்டிஸ் கட்சிய பிரமுகர்தான் ஜெயில் மந்திரிய இருந்தார். என்கிறார்.

"மாப்ளா கலக"ப் போரா கள் சென்னை கொண்டுவரப்ப மூச்சுத் திணறி பலர் இறந்தபே நீதிக்கட்சிக்காரரே சிறை மந் யாக இருந்தார் என்கிறார் ர மூர்த்தி. "மாப்ளா கலகம்" இந் முஸ்லீம் மதக் கலவரம் என்று கிலேய ஆட்சியாளரைப் போல சித்தரித்து, விவசாயிகளின் எழு என்று இன்றும் அங்கீகரிக்க ம கிறது இந்திய தேசிய அரசு.

● உத்திரப்பிரதேசத்தில் பெரிய விவசாயிகள் கிளர்ச்சி தலைமையேற்று நடத்தி வ பாபா ராம்சந்தரை காசி இ பல்கலைக்கழகத்தில் தன் வந்து சந்திக்கும்படி கூப்பி பிரிட்டிஷ் அரசுக்குக் காட் கொடுத்தார் காந்தி பாபா ர சந்தரைக் கைது செய்து ர துரோக குற்றம்சாட்டி கடுமைய தண்டனை விதித்தது பிரிட்டி அரசு.

"பிரிட்டிஷ் சர்க்கார் இப்ப தான் செய்யும் என்று காந்திஜிக் தெரிந்திருக்க வேண்டாமா? கா ஜியை பாபா ராம்சந்தர் சந்தி உரையாடி அவர் திரும்பி பாத்துக்குச் செல்லும்வரை அவரை சர்க்கார் தொடாது எ



படிப்பகம்

திரவாதத்தை சர்க்காரிட ந்து காந்திஜி பெற்றிருக்க ண்டாமா? அப்படிப் பெற்ற துதானே தன்னைச் சந்திக்கும் அவரை அழைத்திருக்க வேண் ''' என்று காந்தியின் துரோகச் பல்மீது அப்பாவித்தனமான ர்விகளை அடுக்குகிறார் ராம த்தி —மேற்படி நூல் 57—58.

● 1928ல் பம்பாயில் 2 லட்சம் ழிலாளர்கள் 8 மாதம் வேலை த்தம் செய்து வெற்றிபெற்றனர். த வேலை நிறுத்தத்துக்கு தார் ஆதரவு அளிக்கும்படியும், ற்கு அடையாளமாக எட்டு ன நிதி உதவியும் கோரி சங் தலைவர் நிம்ப்கர் காந்திஜி ம் மன்றாடியபோது, "காந்திஜி யளிக்க மறுத்ததோடு மட்டு லாமல், போராட்டத்தில் ஈடு . தொழிலாளிகளை அவர்களு ய மனைவிமார்கள் வேலைக் திரும்பும்படி நிர்ப்பந்திக்க ண்டும் என்று அறிக்கை விடுத் '' —மேற்படி நூல் பக். 78.

ரிட்டிஷ் அரச குடும்பத்தினரை ாடே புறக்கணித்தபோது நீதிக்கட்சியினர் ரவேற்புக் கொடுத்தனர் என்கிறார் ராமமூர்த்தி. துவும் பாதி உண்மை தான்.
வல்ஸ் இளவரசருக்கு நல்வரவுகூறி ஆசிரியப்பா ாடியிருக்கிறார் "தேவியக் கவி"யென்று பாலிக் கம்யூனிஸ்டுகள் போற்றும் பாரதியார்.
911இல் பிரிட்டிஷ் பேரரசரை வரவேற்று எழுதிய ாகூரின் பாடல்தான் வெட்கமின்றி இப்போதும் ந்திய தேசியகீதமாக உள்ளது.

● 1930 சட்ட மறுப்பு இயக் துவங்கியபோது "காந்ஜியின் ற்சியினால் ஜமீன்தார்களுக்குச் லுத்த வேண்டிய வரியை ஜமீன் கள் கொடுக்காமல் இருக்கக் ாது. அது சட்ட மறுப்பு இயக் திற்கு அப்பாற்பட்டது என்று ானம் நிறைவேற்றப்பட்டது" மற்படி நூல் பக். 86.

● 1931இல் பெஷாவர் எழுச் ல் ஈடுபட்ட மக்களைச் சுட த்த கூர்க்காப் படையினருக்கு ட்டிஷ் அரசு ஆயுள் தண்டனை த்ததை காந்தி நியாயப்படுத்தி ர், "சுடுஎன்று மேலதிகாரிகூறும் திரவை மீறும் சிப்பாய், அவன் த்துக் கொண்ட சபதத்தை மீறு ாகும். ஆகவே மேலதிகாரிக்கு படியாதவன் கிரிமினல் குற்றத் கு உள்ளாகிறான். அதிகாரி ளயும் சிப்பாய்களையும் மேலதி ிகளுக்குக் கீழ்ப்படியக்கூடாது று நாங்கள் கேட்க முடியாது. னனில், நான் அதிகாரத்திற்கு வந்தால் அமைதியாக இதே அதி காரிகளையும், சிப்பாய்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும். மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதை நான் கற்றுக் கொடுத் தால், நான் அதிகாரத்திற்கு வரும் போது அவர்கள் அதையே செய் வார்கள் என்று நான் அஞ்சுகி றேன்'' (மேற்படி நூல் பக். 92).

● பகத்சிங், சுக்தேவ், ராஜ குரு ஆகியோரைத் தூக்கிலிடுவ தற்கு சம்மதம் தெரிவித்த காந்தி, அவர்களது விடுதலையைக் கோரிய தாக இர்வினுடன் சேர்ந்துகொண்டு நாடகமாடினார். கராச்சி காங்கிரசு கூடிய நாளன்று பகத்சிங் தூக்கி லிடப்பட்டார். ஆனால் சில தினங் களுக்கு முன்பு குண்டு வைத்து இர் வினைக் கொல்ல முயன்றதைக் கண்டித்தும் இர்வின் உயிர் தப்பிய தற்கு வாழ்த்துக் கூறியும் காந்தி தீர்மானம் கொண்டு வந்தார்.

● கடைசியாக, கப்பற்படை எழுச்சி வெடித்தபோது தளபதிஅட் மிரல் காட்ஃப்ரே 24 மணி நேரத் துக்குள் சரணடையும்படியும் இல் லையானால் கடற்படை முழுவதை யும் ஏவி ஒடுக்குவதாகவும் எச்சரித் தான். பணியமறுத்த கப்பற்படை யினர் பொது வேலை நிறுத்தம்செய் யும்படி பம்பாய் மக்களுக்கு அறை கூவல்விட்டனர்.

காங்கிரஸ் கமிட்டியின் சார் பாக, சர்தார் வல்லபாய் பட்டேல் இந்த வேண்டுகோளை மக்களும், தொழிலாளிகளும் நிராகரிக்கவேண் டும் என்று தாக்கீது அனுப்பினார். அவர் விடுத்த அறிக்கையில், 'கப் பற்படையினர் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இறங்கக்கூடாது. கப்பற்படையில் ஒழுங்கும், கட்டுப் பாடும்தான் எல்லாவற்றிற்கும்மேலா னது என்று அட்ரமில் காட்ப்ரேகூறி யதை நான் ஆதரிக்கிறேன்'' என்று கூறினார்.

ஆனால் பம்பாய் நகர மக்க ளும், தொழிலாளர்களும் வல்லப பாயின் இந்த தாக்கீதை நிராக ரித்து, பொது வேலை நிறுத்தம் செய்து, அர்த்தால் நடத்தி, வீதி களிலே ஆர்ப்பாட்டங்கள் செய் தனர். பிரிட்டிஷ் சர்க்கார், அவர் களை அடக்குவதற்காக ஆங்கி லேய சோல்ஜர்களைக் கொண்ட படையை மக்கள்மீது ஏவிவிட்டது. அப்படைகள் கண்மூடித்தனமாக, நிராயுதபாணிகளாக இருந்த மக் கள்மீது துப்பாக்கிச் சூடு செய்த னர். மக்கள் வீராவேசத்துடன் துப்பாக்கிச் சூடுகளுக்கு நடுவே, தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய் தனர். மூன்று நாட்களில் 250பேர் கள் துப்பாக்கிச் சூட்டில்இறந்தனர் என்று சர்க்கார் அறிக்கை கூறிற்று. உண்மை என்னவோ? காயமுற்ற வர்கள், கைகால் இழந்தவர்களின் எண்ணிக்கை யாருக்கும் தெரி யாது.

கம்யூனிஸ்ட் கட்சி வேலை நிறுத்ததையும் அர்த்தாலையும் ஆதரித்தது. இவ்வளவு கொடுமைக் குப் பிறகு காந்தி விடுத்த அறிக்கை யில், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டைப் பற்றி ஒரு ஆட்சேபணை கூட தெரிவிக்கவில்லை. மாறாக அந்த அறிக்கை இந்தப் போராட் டத்தை வன்மையாகக் கண்டித் தது. "மேலிருந்து கீழ்வரையில் (அதாவது இந்துக்களும், முஸ்லீம் களும் தலைவர்கள் முதல் பாமர மக்கள் வரை) ஒன்று சேர்ந்திருந் தால் அதை என்னால் புரிந்து கொண்டிருக்க முடியும்'' என்றுகூறி னார். தலைவர்களிடையே ஒற் றுமை ஏற்படாமல், மக்கள் ஒன்று சேர்ந்திருந்தது என்ன பாவச் செயலோ அவருக்குத்தான் தெரி யும்.

மேலும் அவர் கூறினார் "இப் பொழுது நடக்கும் போராட்டத்தை நடத்த அப்படி மேலிருந்து கீழ் வரை ஒற்றுமை ஏற்பட்டிருப்பது அது இந்தியாவை மிகவும் கீழ்த்தர மான கூட்டத்திடம் ஒப்படைப்ப தாகும். இப்படிப்பட்ட நிகழ்ச்சியை பார்ப்பதற்கு பதிலாக நான் அந்த தீயில் சாவதையே விரும்புவேன்'' என்றெல்லாம் கூறி அந்த மக்கள் எழுச்சியை கடும் சொற்களால் சபித் தார்.

பெரும்பாலும் ராமமூர்த்தியின் நூலிலேயே மேற்கண்ட காந்திய —காங்கிரசு தேசத் துரோகங் களுக்கு ஆதாரங்கள்இருக்கின்றன. இவை தவிர கணக்கிலடங்காத பல துரோகங்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும். ஆனாலும் காந் திய காங்கிரசு இயக்கத்தை விடு தலைப் போராகச் சித்தரிக்கிறார் ராமமூர்த்தி. அதன் மூலம் தான் ஒரு கம்யூனிசப் பார்வையிலிருந்த காந்திய—காங்கிரசு — பார்ப்பனீய வாதி என்பதை மறைமுகமாகக் காட்டிக் கொள்கிறார்.

(தொடரும்)

ரியரும் வெளியிடுபவரும் : எஸ். மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு சைதாப்பேட்டை-சென்னை-600015
டுபவர்: எம். கே. சாரி, பிரேம் பிரஸ், 107-ஏ பெரியார் பாதை (மேற்கு) சென்னை-94.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு கிடக்கும் இந்த உழைப்பாளி குடும்பம் தென் திரிபுரா மாநிலத்தின் கபர்தி கிராமத்து வாசிகள்.



பத்தாண்டு காலத்திற்கு பிறகு திரும்பவும் திரிபுராவின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த இ காங்கிரசு ஆட்சியில் அடுத்தடுத்து நடக்கும் இனவெறி படுகொலைகளில் இந்த கோரப் படுகொலையும் ஒன்று. ''நாங்க எல்லோரும் காங்கிரசுக்குத்தான் ஓட்டு போட்டோம்! ஓட்டு போட்டும்எங்களுக்கு விடிவில்லை! இந்த அரசாங்கம்கூட எங்க உயிர பாதுகாக்கல!'' என்று மனம் வெதும்பி அழுகிறார்கள் படுகொலையில் தப்பிப் பிழைத்த கிராமவாசிகள்.

காங்கிரசு பிணந் தின்னிகள் இந்த அப்பாவி மக்களிடம் ஓட்டு பொறுக்க, தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வழங்கினார்கள்! இனவெறி அமைப்புகளை ஒழிப்பதுதான் எங்கள் முதல் வேலை' என்று மேடை போட்டு முழங்கினார்கள்.


குறிப்பாக, 'வங்காளிகளை அழித்தொழிக்கும் டி. என்.வி என்ற திரிபுராவின் பூர்வீக பழங்குடி மக்களின் தேசீய சேவகர்கள் இனவெறி அமைப்பை முற்றாக துடைத்தொழிப்பதுதான் எங்கள் முதல் வேலை' என்றார்கள். ''அந்த இனவெறி அமைப்புடன் நாங்கள் பேச்சுவார்த்தைக்கூட நடத்தமாட்டோம்'' என்றுநெஞ்சை நிமிர்த்தி ஏமாற்றினார்கள்.

அந்தோ! காங்கிரசு பிணந்தின்னிகளின் வெற்று வாய் சவடாலில் மயங்கிய அப்பாவி மக்கள்— காங்கிரசுக்கு ஓட்டு போட்ட மறு

# இதுதான் இன்றைய இந்தியா

கணமே குடும்பம், குடும்பமாக
கொலை செய்யப்பட்டார்கள்.
ஆண்டில் டி. என். வி. இன
அமைப்பால் படுகொலை செய்
பட்ட அப்பாவி மக்களின்
ணிக்கை 109. இதில், காங்கி
பதவி ஏற்ற ஒரே வாரத்
பலியானவர்களின் எண்ணிக்
யோ 79.

இதோ, காங்கிரசுபிணந்தி
கள் தங்களுக்குள் முடிசூட்டு வி
நடத்திக் கொள்ளும் காட்சி இ
வெற்றி வாகை சூடிய ரஞ்
மஜும்தார் தலைமையிலான
கிரசு மந்திரிசபை பதவியேற்கி



தனியாக அல்ல, எந்த இனவெ
அமைப்புடன் பேச்சு வார்த்
கூட நடத்த மாட்டோம் என்று
தட்டியதோ, அந்த தலைமறை
அமைப்பின் வெளிப்படையா
கட்சியான டி.யு.ஜே.எஸ். எ
திரிபுரா உபஜதி ஜுபா சமிதியுட
கைக்கோர்த்துக் கொண்டதே
அமைச்சரவையிலும் அதற்கு இ
கொடுத்தார்கள். இழுபறியில்இரு
அரியணையை இதன்மூலம் கெ
யாக இழுத்து பிடித்துக் கொ
டார்கள். இப்போதும் சொல்கிற
கள், 'இனவெறி அமைப்பை ஓ
பதுதான் எங்கள் முதல் வேலை
என்று. உண்மைதான், இனி
டி.என்.வி அமைப்புக்கும் 'தே
வண்ணம் பூசி அதையும்
கிரசு கட்சியில் கரைத்து விடுவ
கள்.

அதிகாரத்தை தக்க வைத்
கொள்ள, பதவியை கைப்ப
இனவெறி பயங்கரவாத அமை
களுடன் கைகோர்த்துக் கொ
டே சாதி, மத, மொழி, பிராந்
இனவெறி, பயங்கரவாதத்துக்கு
ரான தேசீயவாதிகள்தாங்கள்த
என அலங்கார பவனி வரும் இ
பம்மாத்து பேர்வழிகளுக்கு பா
புகட்டுவது எப்போது?

படிப்பகம்